பக்தி

ஆனை முகத்தோன்!

இந்த பக்தி பிரிவை பிள்ளையாரோட ஆரம்பிக்க நினைக்கிறேன்.

நம்ம நாட்டுல எல்லா நல்ல வேலையும் பிள்ளையாருக்கு பூஜை போட்டு ஆரம்பிக்கிறதே வழக்கம். சிவனை கும்பிட்டாலும், பெருமாளை, அம்பாளை இப்படி யாரை கும்பிட்டாலும் பிள்ளையாருக்கு யாரும் விரோதமே கிடையாது. அப்படி எல்லாருக்குமே பிடிச்ச தெய்வம். தமிழ் தெய்வம்னு எல்லா உலகுக்கும் பொதுவான தெய்வங்களை குறுக்கறாங்க சிலர். ஒரு இடத்துலேயே அதிகமான வழிபாடு உள்ள தெய்வம்னு இதை எடுத்துக்கனும்னா தமிழ் நாட்டுக்கு இந்த ஆனைதான் தெய்வம். அந்த அளவுக்கு மூலை முடுக்கெல்லாம் கோவில் இருக்கிறது ஆனைக்குத்தான்.
தமிழ்னாலே நினைவுக்கு வர அவ்வை பாட்டிக்கும் இவர் ரொம்பவே ப்ரெண்டு. அவளோட பக்திக்கு அடையாளமா ஒரு கதை பாக்கலாமா?

சுந்தரர் சிவ பெருமானை பல இடங்களிலே கண்டு வழிபாடு செய்த பின்னே ஒரு நாள் "இன்னும் எவ்வளவு நாள் இப்படி இந்த உலகத்துலே நான் கஷ்டப்படணும்? சீக்கிரம் அழைத்துக்க மாட்டாயா" என்று கதறிட்டார். சிவ பெருமானும் சரி, இவன் உலகத்துலே கஷ்டப்பட்டது போதும் என்று நினைத்து இந்திரனை கூப்பிட்டு "ஐராவதத்தை கொண்டு போய் சுந்தரத்தை அழைத்து வாங்க" என்று உத்தரவு போட்டார்.

அப்படியே அவர்களும் யானையை கொண்டு போய் அழைத்து ஏற்றிக் கொண்டு கயிலைக்கு போக ஆரம்பித்தனர். சுந்தருடைய உயிர் நண்பரான சேரமான் பெருமாள் அவர் வானத்தில் போவதை பார்த்து "எங்கே போறீங்க?" என்று கேட்க கயிலை என்றவுடன் நானும் வருகிறேன் என்று சொன்னார். தன் குதிரையின் காதில் பஞ்சாட்சரத்தை ஓத அது வானத்தில் பறந்து சுந்தரரின் யானைக்கு முன்னே பைலட் மாதிரி போக ஆரம்பித்தது. தம் ராஜா போவதை பார்த்து சேரமானின் மெய்காவலர்கள் வாளால் தம்மை வெட்டி உயிரை மாய்த்துக்கொண்டு சூக்ஷ்ம உடம்போட சேரமானுக்கு முன்னே பைலட்டாக போக ஆரம்பித்தார்கள்.

இவர்கள் எல்லோரும் இப் படி திருக்கோவிலூரை தாண்டி போகிற போது அங்கே அவ்வை பாட்டி பிள்ளையாருக்கு பூஜை செய்து கொண்டு இருந்தாள். நாங்க கைலாசம் போறோம் நீயும் வான்னு கூப்பிட்டார்கள். அவ்வையோ எனக்கு பிள்ளையார் பூஜைதான் முக்கியம் நான் அப்புறம் வரேன்னு சொல்லிட்டாங்க. பிள்ளையாரோ அவ்வையாரோட பக்தியை பாத்து நேரே வந்துட்டார். அவ்வை நிவேதனம் பண்ணதை எல்லாம் எடுத்து நிதானமா சாப்பிட ஆரம்பிச்சார். அவ்வை போட போட நிதானமா சாப்பிட்டார். கடைசில எனக்கு ரொம்ப சந்தோஷம் என்ன வேண்டும்னு கேட்டார். "உன் அருள் தவிர வேற என்ன வேண்டும்" ன்னு அவ்வை சொல்ல சரி, என் மேலே ஒரு பாட்டு பாடுன்னார். சீத களப என்று ஆரம்பித்தார் அவ்வை. விநாயகர் அகவல் அன்ற அருமையான பாடல் பாட பிள்ளையார் சந்தோஷப் பட்டு தும்பிக்கையால ஒரே தூக்கா தூக்கி பாட்டியை கைலாசத்துல கொண்டு வைத்தார்! இவள் சேர்ந்த பிறகு சேரமானும் சுந்தரரும் வந்து சேர்ந்தாங்க. எங்களுக்கு முன்னால எப்படி வந்து சேர்ந்தாய் என்று இருவரும் அதிசயிக்க அவ்வை இந்த பாட்டு பாடினாள்:

மதுர மொழி நல்உமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினைய வல்லார்க்(கு) அரிதோ? முகில்போல் முழங்கி
அதிரவரும் யானையும் தேரும் அதன்பின் சென்ற
குதிரையும் காதம் கிழவியும் காதம் குல மன்னனே
--
பொருள்:

சாக்ஷாத் பரா சக்தியின் பிள்ளையின் சரணாரவிந்தங்களையே தியானிக்கிறவர்களுக்கு எந்த ரத கஜ துரக பதாதியும் காத தூரம் பின் தங்கிதான் வர வேண்டும்.
--------
கடைசி 3 பத்திகள் எடிட் செய்யப்பட்டன- திவா

---

-பக்தி யோகத்துல இறங்கறவங்க எப்படி இருக்கனும்?

-பக்தி யோகத்துல இறங்கறவங்க எப்படி இருக்கனும்னு ஏதாவது உண்டா?

உண்டே? இப்ப சொல்லப்போறதை செய்ய செய்ய பக்தி வழி பலப்படும்.

1. பயிற்சி: அசையாத மனசோட எப்போதும் தொடர்ச்சியாக கடவுளை நினைச்சுக்கிட்டே இருப்பது. அதெப்படி எப்பவுமே நினைக்க முடியும்ன்னா, முடியும். வழியை அப்புறமா பாக்கலாம்.
2. விவேகம்: சரி தவறு என்கிற பாகுபாடு தெரியணும். அதில் சரியானதையே எப்பவும் தேர்ந்தெடுக்க முடியனும்.
3. விமோகம்: மோகம் நமக்கு தெரிஞ்சதுதானே. அது உலக விஷயங்கள்ல. கடவுள்கிட்ட வைக்கிறது நல்ல மோகம். அதாவது விமோகம்.
4. சத்தியம்: வாய்மை. ஆன்மீகத்தில எந்த வழியா போனாலும் கடை பிடிக்க வேண்டியது. உண்மையே நினைத்து உண்மையே பேசி மனச்சாட்சி சொல்கிறதை கேட்டு நடப்பது.
5. அர்ஜவம்: நேர்மை
6. கிரியை: எல்லா சீவ ராசிகளுக்கு நல்லதே செய்வது. ஏன்னா எல்லா சீவராசிகளிடமும் கடவுள் இருக்கிறார் இல்லையா?
7. கல்யாணம்: திருமணம் இல்லைங்க! இதுவும் சம்ஸ்கிருதத்திலிருந்து வந்து வேற விதமா பயன்படுகிற பல வார்த்தைங்கள்ல ஒன்னு! கல்யாணம் என்கிறது மற்றவர்களிடம் அன்பு பாராட்டி அவர்கள் நல்லா இருக்கணும்னு நினைக்கிறது. கடவுளிடம் வேண்டிக்கிறப்ப எல்லாரும் நல்லா இருக்கணும், உலகம் அமைதியா நல்லா இருக்கணும்னு வேண்டிக்கிறது.
8. தயை: கருணை. அன்பே சிவம். கடவுள் அன்பு, மன்னிக்கும் தன்மை, பரிவு கொண்டவன். அவனை புரிந்து கொள்ள , அடைய முய்ற்சி பண்ணுகிற நாமும் அவனை மாதிரி இருக்க பழக வேண்டும்.
9. அஹிம்சை: மனதாலும் செயலாலும் மற்ற சீவ ராசிகளுக்கு துன்பம் விளைவிக்காம இருப்பது.
10. தானம்: கஷ்டப்படுகிற ஏழை எளிய மக்களுக்கு முடிந்தவரை, சுத்தமான உள்ளத்தோட வாரி கொடுக்கிறது.
11. அனவஸ்தை: அவஸ்தை தெரியுமில்லையா? கஷ்டப்படுகிறது. அனவஸ்தை எப்பவுமே சிரிச்சுகிட்டு நம்பிக்கையோட இருப்பது.
இந்த பதினொரு விஷயமும் பக்தி வழில சீரியஸா ஈடுபடறவங்களுக்கு இருக்க வேண்டிய விஷயங்கள். நமக்கு இதெல்லாம் இல்லைன்னா வளர்த்துக்க வேண்டியது.

---

விவேகம் -ஆகாரம்

நேத்து பக்தி யோகத்துல இருக்கிறவங்க வளத்துக்க வேண்டிய விஷயங்கள்ன்னு ஒரு பட்டியலே பாத்தோம். இன்னிக்கு அதுல ஒண்ணைப்பத்தி மட்டும் கொஞ்சம் மட்டும் பாக்கப்போறோம். இந்த பட்டியல்லே இருக்கிறதுல விவேகம் என்பத ஸ்ரீராமானுஜர் வேற மாதிரி பொருள் பண்ணறார். விவேகம் உணவை குறிச்சதாகவே சொல்கிறார். அந்த ரீதியிலேயே பாக்கலாம். விவேகம் உணவை பகுத்து ஏத்துக்கொள்வது. உணவில ஏன் அவ்வளவு முக்கியத்துவம்னா அது நம்மோட குணங்களுக்கும் சாப்பாடு போடுது. குணங்கள் நம்மோட கூட பிறந்தது ஆனாலும் நம் சாப்பாடுக்கு தக்கபடி அதிகமோ குறைவோ ஆகும்.

பல இடங்களிலேயும் நாம உணர்சிகளை கட்டுப்படுத்தனும்னு பாத்துக்கிட்டே வந்தோம் இல்லையா? அதுக்கு சுலபமான வழி சாப்பாட்டை சரி செய்யறதுதான். எப்பவுமே குணம் ஒரே மாதிரி இருக்காது. சில சமயம் ரஜோ குணம் அதிகமாகும்; சில சமயம் தமோ குணம். இப்படி மாத்தி மாத்தி ஒண்ணு அதிகமாகும். நம்ம நோக்கம் சத்வ குணத்தை அதிகப்படுத்தி அதையே முடிந்த வரை நிலைச்சு நிக்க முயற்சி செய்யறதுதான். தமோ குணத்தை ரஜோ குணம் முழுங்கிடும். சத்வம் மேலானா ரஜோ குணம் அடங்கும்.

ரொம்ப உப்பு காரமா இருக்கிறது, கசப்பு, புளிப்பு, ரொம்ப சூடு பொதுவா அதிக ருசி உள்ளது இதெல்லாம் ராஜஸம்.
நாள் பட்டது, பழையது, ஊசிப்போனது, மாமிசம். எச்சில் இதெல்லாம் தாமஸமானது. அதிக சுவை இல்லாம ஒரு அசட்டு திதிப்பு கொஞ்சம் துவர்ப்பு இதெல்லாம் சத்துவம்.

அதாவது பொதுவா வாய்க்கு ரொம்ப ருசியா இருக்கிறது மனசுக்கு நல்லது செய்யாது.

---

ராஜஸ உணவு மனசோட சலனத்தை அதிகப்படுத்தும். தாமஸ உணவு தூக்கம் வர வழைக்கும். நம்ம செய்கைகள் மந்தமாகும்.என்னடா தூங்கி வழியறியேன்னு மத்தவங்க கேட்பாங்க. அதனால நாம் தூய சத்துவ உணவையே சாப்பிடனும்.

ஆஹார சுத்தௌ ஸத்வ சுத்தி:
ஸத்வ சுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:
என்கிறது சாந்தோக்யோபநிஷத். அதாவது ஆகாரம் தூய்மையானால் மனத்தூய்மை உண்டாகும். மனத்தூய்மையால் இறை உணர்வு உறுதி படுகிறது.

இந்த உணவுல மூன்று குற்றங்கள் வரும் என்கிறாங்க.
இயல்பான குற்றம் ஒன்று. பூண்டு வெங்காயம் (வெங்காய சாம்பார் கூடாதுன்னா ஆன்மீகமே வேண்டாம்ன்னு சொல்கிறது காதுல விழுது! :-)) மது மாம்சம் இவை எல்லாம் இயற்கையாகவே பிரச்சினை பண்ணும். இவற்றை சாப்பிட்டா இறை உணர்வில மனசு லயிக்காது. மனத்தூய்மை கெட்டுப் போகும். காமமும் குரோதமும் மேலோங்கும். பூமில விளையும் கிழங்குகள் தமோ குணத்தை அதிகப்படுத்தும்.

நம்ம மனசு ரொம்பவே சக்தி உள்ளதுன்னு பாத்திருக்கோம். நல்ல மனசுள்ளவங்களோட பழகினா நம்மை அறியாம மனசு அதே போல ஆகுது. இப்படி மனுஷனோட மனவீச்சு சுற்றுப்புறத்தையே பாதிக்கும். இது கண்ணுக்கு தெரியாத நுட்பமான சக்தி. இது ஒத்தரோட எல்லா பொருட்களிலேயும் கூட பரவும். அதனால யாரிடம் இருந்து உணவு கிடைக்குதுங்கிறது முக்கியமாகுது. நம்மிடம் ரொம்ப பிரியம் வச்சு இருக்கிற அம்மா சமைக்கிறது நல்லதே பண்ணும். கடனேன்னு, வீட்டு/ மத்த பிரச்சினை எல்லாம் மனசில போட்டு உழப்பிக்கிட்டு சமையல்காரர் சமைக்கிறது கெட்டதுதான் பண்ணும். அத ஆச்ரேய தோஷம் என்கிறாங்க.

மூணாவதா சுத்துப்புற சூழலால உணவு கெட்டு போகலாம். பாத்திரம் சரியா சுத்தமா இல்லாம இருக்கலாம். பூச்சி ஏதாவது விழுந்திருக்கலாம். குப்பை தலைமயிர் மண் இப்படின்னு ஏதாவது கலக்கலாம். இப்படி பட்ட சாப்பாடு சாப்பிடறவங்க மனசை மாத்தும் அதனால யார்கிட்ட எந்த மாதிரி உணவை ஏத்துக்கொள்வது என்பதில ரொம்பவே கவனம் இருக்கனும்.

ராமானுஜர் சொந்த அனுபவத்துலேந்து சொல்லி இருக்கனும். ஏன்னா சாப்பாட்டால அவர் பட்ட கஷ்டம்..
நாளைக்கு சொல்றேன்.

---

மதியம் வெள்ளி, ஏப்ரல் 18, 2008

## ராமனுஜர் பட்ட பாடு!

ஸ்ரீ ராமானுஜர் சிஷ்யர்களுக்கு பாடம் எடுப்பார். மடை திறந்த வெள்ளம் போல பாடம் ஓடிகிட்டே இருக்கும். அப்படி ஒரு ஞாபக சக்தி. ஆனா திடீர்ன்னு ஒரு நாள் அவர் பாடம் சொல்லிகிட்டு இருக்கறப்ப அடுத்த வரி ஞாபகம் வரலை; நின்னு போச்சு! கூட இருந்தவங்க எல்லாருக்கும் ஆச்சரியம். ராமானுஜரும் ஆச்சரியப்பட்டு ரொம்ப முயற்சி பண்ணி திருப்பி சொல்லி பாத்து, அடுத்த வரியை நினைவு படுத்தி பிறகு மேலே பாடம் சொன்னார்.
பாடம் முடிந்த பிறகு, “ஏன் இப்படி ஆச்சு?" ன்னு ரொம்ப யோசனை பண்ணார். ஒண்ணுமே பிடிபடலை.

அடுத்த நாளும் அதே போல தடங்கல் ஏற்பட்டது. இன்னிக்கு இது ஏன்னு ஒரு வழியா கண்டு பிடிச்சே ஆகணும்னு தீர்மானம் பண்ணினார். இரண்டு நாளா என்ன செய்தோம் என்று எல்லாம் யோசனை பண்ணி பண்ணி ஒண்ணும் புரியலை.

மதிய உணவின் போது காய்கறி எல்லாம் பச்சுன்னு நல்லா இருக்கிறது தெரிஞ்சது. மடப்பள்ளி ஸ்வாமிகிட்டே விசாரிச்சார். ஏது இந்த காய்கறி எல்லாம்னு. அவர் "இப்பல்லாம் புதுசா ஒத்தர் கொண்டு வரார். நல்லா இருக்கு" ன்னார். ராமானுஜருக்கு ஏதோ புரிஞ்ச மாதிரி இருந்தது. "யார்பா அது? எப்போ வருவார்?" ன்னு கேட்டார். ஸ்வாமி நாளை கால அவர் வறப்ப உங்களுக்கு சொல்லறேன் அப்படின்னார். நிச்சயமா சொல்லுப்பா என்று ராமானுஜரும் சொன்னார்.

---

அடுத்த நாள் காலை பூஜை எல்லாம் முடிந்த பிறகு காய்கறிகாரர் வந்திருக்கிறதா தகவல் வந்தது. ராமானுஜர் போய் வியாபாரியை விசாரிச்சார். பேர் ஊர் எல்லாம் கேட்ட பிறகு "இந்த காய்கறி எல்லாம் எங்கிருந்து வருது?" ன்னு கேட்டார். "என் தோட்டத்திலேந்துதான், ஸ்வாமி!" என்றார் அவர். அந்த இடத்தை பாக்கலாம் வான்னு கிளம்பிட்டார் ராமானுஜர். வியாபாரி கொஞ்சம் தயங்கினாலும் வேற வழியில்லாம போனார். ஊர் எல்லையை தாண்டியும் போய்கிட்டே இருக்கிறதை பாத்து ராமானுஜருக்கு ஏறக்குறைய புரிஞ்சே போச்சு. கடைசியில் "இதுதாங்க என் தோட்டம்" ன்னு வியாபாரி சொல்ல கூட வந்தவங்க திகைச்சு போயிட்டாங்க. அவங்க நின்னுகிட்டு இருந்தது சுடுகாட்டுப்பக்கத்துலே! "ஏம்ப்பா தோட்டம் போட இந்த இடம்தானா கிடைச்சுது" என்று சொல்லி எல்லாரும் திரும்பி வந்துட்டாங்க.

பழைய காய்கறிகாரர்கிட்டே திருப்பியும் வாங்க ஆரம்பிக்க மறதி பிரச்சினை மறைஞ்சு போச்சு. இப்படி எங்கே பயிர் விளையுது என்கிறது கூட முக்கியமா போயிடுது.

---

மதியம் சனி, ஏப்ரல் 19, 2008

பக்தி, வழிபாடு வகைகள்

பக்தி என்கிறது நம்மைவிட அதிகமான சக்தி வாய்ந்த, எல்லாம் தெரிந்த, எல்லாம் செய்ய வல்ல கடவுள் மேலே அன்பும் பற்றும் வைக்கிறது. அந்த கடவுளே ஆகமங்கள் புராணங்கள் மூலமாக எப்படி தன்னை வழிபட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். சம்பிரதாயமாக வந்து இருக்கிற பூஜைகள், பஜனைகள் போன்றவற்றால் அவரை போற்றுகிறோம். இது கொஞ்சம் கொஞ்சமாக ஒரு குறிப்பிட்ட உருவத்திலே கடவுளை பார்க்க ஆரம்பித்து படிப்படியாக முன்னேறி ஒரு மிக உயர்ந்த நிலையில் அவரை சரணாகதி செய்ய வேண்டும்.

பக்தில 2 வகை உண்டு. ஒன்று ஒரு விதிக்கப்பட்ட வழில வழிபாடு செய்யறது. நிறைய பெரியவங்க வழிபாட்டுக்கான விதிகள் வரிசைகளாக எழுதி வச்சிருக்காங்க. இத தெரிஞ்சிகிட்டு முடிஞ்சா ஒரு குரு மூலமா உபதேசத்தோட வழிபாட்டை ஆரம்பிக்கலாம். இந்த பெரியவங்க ஆரம்பிச்சு வைக்கிறதுல ஒரு தனி மதிப்பு இருக்கு. இத வைதேய பக்தி- கிரம வழிபாட்டுன்னு சொல்வாங்க.

இப்படி இல்லாம பக்தி ப்ரேமை அதிகமா இருக்கிறவங்க ஒரு விதியும் இல்லாம வழிபடுவது உண்டு. கண்ணப்ப நாயனார் எந்த விதிகளை கடைபிடிச்சார்? இதில அன்பு தீவிரமா இருப்பதே முக்கியம். பக்தி பித்து என்கிறாங்களே அப்படி.

அதுக்காக “நமக்கு அன்புதான் முக்கியம்; வழி இல்லை; நான் எப்படி வேணா வழிபடுவேன்” னு கிளம்பறது தப்பு. நாம பலர் அதுக்கு தேவையான அளவு பக்தி இல்லாமதான் இருக்கோம். அப்படி இருந்தா எல்லா சீவன்களிடமுமே அன்பு காட்டுவோம். தேவையான பக்தி இருக்கிறதா நினைக்கிறீங்களா? கண்ணை கொடுக்க தயாரா? இல்லைதானே? அவ்வளவுதான்.

பர பக்தி என்பது உருவமில்லாமல் பரப்பிரம்மத்தின் மேலே பக்தி வைப்பது. இது ஞான யோகத்தில் ஒரு பகுதி.

நாம் சாதாரணமாக அப்படி ஒரு கண்ணுக்கு தெரியாத கடவுளிடம் பக்தி வைக்க முடியாததாலே கடவுளுக்கு நம் மனசுக்கு மகிழ்ச்சி தரும்படி ஒரு உருவத்தை கற்பனை செய்துக்கிறோம். சிலருக்கு கடவுள் குழந்தையா இருப்பது பிடிக்கும். அவர்கள் கண்ணன் பால முருகன் போல சில தெய்வ உருவங்களை வழி படுவாங்க. சிலருக்கு கடவுளை தாயா பாக்க பிடிக்கும். அவர்கள் அதுபோல கற்பனை செய்துபாங்க. சிலர் எல்லாம் வல்ல சக்தி வாய்ந்த மூர்த்தியாக பாக்க நினைப்பாங்க. இவங்க கடவுளை பல ஆயுதங்களோட கூடிய தெய்வமா கற்பனை செய்வது சுலபம்.

இப்படி மக்களோட மனசு வித்தியாசமா இருப்பதால அவர்கள் மனசுக்கு ஏற்றபடி கடவுளை கற்பனை செய்கிற சுதந்திரத்தை பெரியவங்க கொடுத்து வெச்சிருக்காங்க. அப்பதான் அவங்க மனசு கடவுள்ல சுலபமா லயிக்கும். பக்தியும் பலப்படும். இதை “இந்துக்களுக்கு நிறைய கடவுள்கள் இருக்காங்க, அது எப்படி நிறைய கடவுள்கள் இருக்க முடியும்? அப்படி இருந்தால் யார் உசத்தி? யார் தாழ்த்தி? ஏன்?” என்கிற கேள்விகள் எல்லாம் அசட்டுத்தனம்தான்.

---

இந்த மாதிரியான பக்தி அபர பக்தி என்கிறாங்க.

---

மதியம் திங்கள், ஏப்ரல் 21, 2008

பக்தி வகைகள் 2

இந்த அபர பக்தியிலே நிறைய வகைகள் இருந்தாலும் சிலது நிறைய பாக்கலாம். பயபக்தி என்பது கடவுளை வெளியே -அதாவது ஒரு சிலையிலோ, எண்ணிலோ, சித்திரத்திலோ, புத்தகத்திலோ வேற பொருளிலோ- பாக்கிறது. அவர் ஒரு கோவிலிலோ ஸ்ருமிலோதான் இருப்பார். இங்கே இருக்கிற கடவுள் எல்லாம் வல்லவர். அவரை வேண்டிக்கிட்டு பூஜை எல்லாம் செய்தால் வேண்டியது கொடுப்பார். செய்யாவிட்டால் கெட்டது நடக்கும்; நம்மை தண்டிப்பார். நம் நாட்டு மதங்கள்ல முக்காலே மூணு வீசம் இப்படித்தான் இருக்கும். தமஸ் அதிகமா இருக்கிற நபர்கள் இப்படி கடை பிடிப்பாங்க.

அடுத்தது அனன்ய பக்தி. இது தனிப்பட்டது, தீவிரமானது. ரஜசிக குணம் கொண்டவங்க இப்படி இருப்பாங்க. இதுல ஒரே கடவுள்தான். அவர் என் இதயத்துல இருப்பார்; நான் விரும்புகிற உருவுல இருப்பார். அவர் என் இஷ்ட தெய்வம். மத்தவங்ககிட்டே அவரேதான் வேற உருவுல இருக்கார். அதனால இப்படி இருக்கிறவங்க மத்தவங்களோட கடவுளையோ வழிபாட்டையோ கேலி செய்ய மாட்டாங்க.

அடுத்து ஏகாந்த பக்தி. அழுக்கில்லாத சாத்விக எண்ணங்கள் இருக்கிறவங்க இப்படி இருப்பாங்க. இந்த நபர் பக்தி செலுத்துவது ஒரு காரணமில்லாமதான். "கடவுள் எனக்கு இது கொடுப்பார், அது நடக்கணும்" னு எதுவும் இல்லாத பக்தி. கஷ்டமோ நஷ்டமோ இந்த பக்தி மாறாம அப்படியே இருக்கும். இவரோட கடவுள் எப்போதும் எங்கேயும் இவருடனேயே இருப்பார்.

---

மதியம் செவ்வாய், ஏப்ரல் 22, 2008

விமோகம்

அடுத்ததா நாம் பாக்க வேண்டியது
விமோகம்.
இதுக்கு தப்பா பொருள் சொல்லிட்டேன். சுத்தி வளைச்சு பாத்தா சரியா இருந்தாலும்...மோகம் இல்லாம இருப்பதே விமோகம். அதாவது பற்றுக்களில் இருந்து விடுபடுதல்.
இது நம்ம கர்ம கட்டுல இருந்து நம்ம விடுவிக்கும். புலன்கள் போற வழில பற்று போச்சுனா மனசோட சீரான நிலமை கெட்டு போகும். அதனால சாதகனோட முன்னேற்றம் பாதிக்கப்படும். "கண் போன போக்கிலே" போறவங்க சீக்கிரமே சஞ்சலத்துல மாட்டிப்பாங்க. அதனால் மனசு தூய்மையோட இருக்கணும்னா விமோகம் வேண்டும்.

கண்ணன் சொல்றான்:

> நாஸ்தி புத்தி ரயுக்தச்ய
> நசா யுக்தச்ய பாவனா
> நசா பாவயுத: சாந்தி:
> அசாந்தஸ்ய குதஸ்ஸுகம்? (கீதை 2:66)

புலன்களை ஜெயிக்காவிட்டா நிலைத்த புத்தி வராது; சஞ்சலமில்லாத எண்ணங்களும் வரா. யாருக்கு எண்ணங்கள் நிலையா இல்லையோ அவனுக்கு சாந்தி இல்லை. யாருக்கு சாந்தி இல்லையோ அவனுக்கு சுகம் ஏது?

இந்த பற்றுக்களுக்கு எல்லாம் காரணம் இந்த மனசும் புலன்களும் கை கோத்துகிறதுதான். இது ரெண்டும்தான் பண்பாடு என்னன்னு நிர்ணயம் பண்ணும். இந்த பண்பாடுகள் மனுஷனோட உயர்வு தாழ்வுகளுக்கு காரணமா ஆகும்.

---

மனசோட விகாரங்கள் அதாவது வேற வேற உருவங்கள் ஆறு. இதுக்கு பெயர்கள் கொடுத்து இருக்காங்க.
காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சர்யம்.

இதையெல்லாம் சாதாரணமான நம்ம கையாளறதும், சிறந்த பக்திமான்களும், (endangered species!) ஞானிகளும் பயன்படுத்தறதும் வித்தியாசப்படுது.
யார் யாரை கட்டுப்படுத்தறங்க என்பத பொறுத்துன்னு முன்னாலேயோ பாத்தோமோ?
பாம்பாட்டி பாம்புங்கள உடம்புல எங்கே வேண விட்டுப்பான். அவை அவனுக்கு கடுப்பட்டு இருக்கும். நாமோ பாத்தாலே பயப்படுறோம் இல்லையா?

புலன்கள ஜெயிச்சவங்க அதை எல்லாம் இஷ்டத்துக்கு ஆட்டிப்படைப்பாங்க. நம்மாலே முடியாது. இந்த ஆறுல ஏதாவது ஒண்ணு கூட போதும் நம்மளை ஆட்டி வைக்க.
விவேக சூடாமணில சங்கரர் நம்ம எச்சரிக்கை பண்ணுகிறார்.

உதாரணமா 5 மிருகங்களை சொல்றார்.
மானை பிடிக்க அந்த காலத்துல வேடர்கள் காட்டுக்கு போய் மான் இருக்கிற இடத்தைகண்டு பிடிச்சு புல்லாங்குழல் போல ஒரு வாத்தியமிசைப்பாங்களாம். மான் அதுல மயங்கி நிக்கும். அப்ப கிட்டே போய் பிடிச்சுடுவாங்களாம். யானைய பிடிக்க இன்னொரு யானையை விடுவாங்களாம். அது போய் உராய்ஞ்சுகிட்டு நிக்கும் போது யானை மயங்கி போக சுலபமா பிடிப்பாங்களாம். விட்டில் பூச்சி பாட்டுக்கு சௌக்கியமா பறந்துகிட்டு இருக்கும். ஒரு விளக்கு வெளிச்சத்தை பாத்தா அது ஈர்க்கப்பட்டு கிட்டே போய் அந்த விளக்கு சுடர்லேயே விழுந்துடும். மீனவன் ஒரு புழுவை தூண்டில்ல போட்டு தண்ணீக்குள்ள விடுறான். மீன் அத பாத்து ஜொள்ளு விட்டுக்கிட்டு சாப்பிட வந்து மாட்டிக்கும். வண்டு பூவோட வாசனையை பாத்து கிட்டே வந்து தேனை குடிச்சு மயங்கும். பூ சாயந்திரம் ஆகி திருப்பி கூம்பிடும். வண்டு உள்ளே மாட்டிக்கும்.

இப்படி உயிர்கள் ஒரே ஒரு புலனோட ஈர்ப்புல மாட்டிக்குது. மனுஷா நீயோ அஞ்சு புலன்கள் பின்னாடியும் ஓடறே! உன் கதி என்னன்னு யோசி.

---

மதியம் புதன், ஏப்ரல் 23, 2008

புலன்கள் -திருப்பம்

மிருகங்களுக்கோ புலன்களால கட்டுப்பட்டு தளைதான் உண்டாகும். மனிதனுக்கோ அதால பாபமும் ஏற்படும்.

பக்தி சாதனைல இருக்கிற மனிதன் இந்த காம குரோதங்கள் கீழ் தரமான உலக விஷயங்கள்ல போகிறபோது அதை எல்லாம் மடை கட்டி தண்ணிய திருப்பறாப்போல பகவான் பக்கம் திருப்பறான். ஆசை படனுமா ஆண்டவனை பாக்கணும்னு ஆசை; தாபம் படனுமா அவனை பிரிஞ்சு ஒரு கணமும் வாழ முடியாதுன்னு தாபம்; அவனை பாத்தா மட்டுமே மனசு சமாதானமா ஆகும் என்கிற முடிவு - இதெல்லாம் உலக பற்றால வர காமத்தை தூயதா ஆக்கும்.

என்னடா இவ்வளோ கதறறேனே, ஆண்டவன் இன்னும் அருள் பாலிக்கலையே என்கிற ஏக்கம் அதனால வர ஆத்திரம் இவை குரோதத்தை தூய்மை ஆக்கும்.

என் கடவுள், என் பகவான், அவன் எனக்குத்தான், எனக்கே சொந்தம் என்கிற தீவிர பற்றுதலால் சாதாரணமா செல்வத்து மேலேயும் உறவினர் மேலேயும் காட்டுகிற லோபம் தூய்மையா ஆகும். என்னோடது எனக்கு மட்டும்தான் என்கிற மோகத்தையும் தூயதா ஆக்கும்.

"கடவுளே என்னை விட்டுவிட்டுபோயிடுவியா? உன்னை ஜெயிப்பேன். உன்ன என் மனசுல போட்டு பூட்டி வைப்பேன். என் கல்வி செல்வம் பதவி எல்லாத்தையும் உன்னை பிடிக்கிறதுல

செலவழிப்பேன்" என்கிற உறுதியும் ஆர்வமும் கல்வி செல்வத்தால வர மதம் அல்லது அகந்தையை தூய்மையாக்கும். பிரம்ம ஞானம் பெற்றவங்களை பாக்கிறப்ப "ஆண்டவா அவங்களுக்கு மட்டும் காட்சி தர, எனக்கு இல்லியா?" என்கிற மாத்சர்யம் (பொறாமை) தூயதாகும்.

இப்படி புலன்கள் மூலமா நமக்கு ஏற்படுகிற பற்றை திருப்பி கடவுள் மேலே செலுத்தறப்ப உலகத்து மேலே பற்று போய் பரம் பொருள் மேலே பற்று வரும் .

> "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
> பற்றுக பற்று விடற்க்கு"

ன்னு சொல்லி இருக்காங்க இல்லை?

---

மதியம் வியாழன், ஏப்ரல் 24, 2008

பயிற்சி

அடுத்து பயிற்சி.

ஏற்கெனவே மனசையும் புலன்களையும் கட்டுப்படுத்தனும்னு போர் அடிக்கற அளவு சொல்லியாச்சு. :-))
அது எப்படின்னும் பாத்துட்டோம்.

இந்த கட்டுப்பாடு திடீர்னு வராதில்லையா? நாம் குதிரையோட கடிவாளத்த பதமா பிடிக்கிற மாதிரி இவைகள பிடிச்சு கொஞ்சம் கொஞ்சமா கட்டுக்கு கொண்டு வரணும். ஒரேயடியா இழுத்தா அறுத்துக்கிட்டு ஓடிடும். ரொம்ப லூஸா விட்டா கட்டுக்கே வராது. இப்படி மனசையும் புலன்களையும் கட்டுக்கு கொண்டு வரதே பயிற்சி.

இதை தினசரி செய்யனும். எல்லாமே கட்டுக்குள்ள வந்தாச்சுன்னு தோன்றினா கூட செய்யனும். இல்லாட்டா பழைய விஷயங்கள் மெதுவா வரதே தெரியாம உள்ளே வந்திடும். வீட்டை பெருக்கி சுத்தமாக்கினா கூட தினசரி பெருக்கறோம் இல்லையா?

விடாத பயிற்சி செய்யும் போது அலுப்பு ஏற்படும். "அட எவ்வளோ நாள் இப்படியே இருக்கிறது? ஒரு நாள் வெங்காய சாம்பார் சாப்பிட்டா கெட்டா போயிடும்?" ன்னு மனசு கேக்கும். இதுக்கெல்லாம் இடம் கொடுத்தா அவ்ளோதான். குதிரைங்க நம்மள இழுத்துக்கிட்டு ஓட ஆரம்பிக்கும்.

எப்போ காம குரோதங்களிலேந்து விடுபட்டு வெறும் இறை அன்பு மட்டுமே நிக்குமோ அது பயிற்சியோட முதிர்ந்த நிலை.

> லோக ஹாநௌ சின்தா ந கார்யா
> நிவேதி தாத்ம லோக வேதத் வாத்

என்கிறது நாரத பக்தி சூத்ரம். அதாவது பக்தன் உலகத்துக்கு சேவை செய்ய விரும்பறான். ஏன்? உலகம் துன்பப்படறதே என்பதால இல்ல. உலகம் முழுதும் இறைவனை பாக்கிறதால உலகத்துக்கு செய்யறது இறைவனுக்கே செய்கிறது என்று புரிஞ்சதால அதுல கிடைக்கிற சந்தோஷத்துக்காக செய்கிறான்.
இதையே உலகத்துக்கு செய்கிறதா நினைச்சா அதால துன்பமே ஏற்படும்.

சிவானந்தர் ரிஷி கேசத்திலே ஆச்சிரமம் நிறுவி வேலை செய்கிற போது அவரோட தொண்டர் ஒத்தரை வெறிநாய் கடிச்சு விட்டது. சிவானந்தர் சன்னியாசி ஆகு முன்னே டாக்டரா இருந்தவர். அதனால அவரே தொண்டரை கவனிச்சுகிட்டார். இப்பவும் சரி அப்பவும் சரி வெறிநாய் கடிக்கு நல்ல வைத்தியம் கிடையாது. அவர் கவனிப்பை பாத்து மத்தவங்க "ஆஹா! தன் தொண்டரை

எவ்ளோ நல்லா பாத்துக்கிறார்"ன்னு நினச்சாங்க. சில நாட்களுக்குள்ள அவரை வேற ஊருக்கு அனுப்பி வைத்தியம் பாக்கிறது நல்லதுன்னு தெரியவே சிவானந்தரை கேட்டாங்க. அவரும் சரின்னு சொல்லி தேவையான பணம் கொடுத்து அனுப்பி வைத்தார். அடுத்த ஆசிரம வேலையை பாக்க ஆரம்பிச்சார். ஊருக்கு போனவர் நலன அப்பப்ப விசாரிச்சார். வைத்தியம் எதுவும் பலனில்லாம தொண்டர் இறந்து போனார். செய்தி வந்த பிறகும் சிவானந்தர் வழக்கமான வேலையை பாத்துக்கிட்டு இருந்தார்; பதறவும் இல்லை; வருத்தப்படவும் இல்லை.

உயந்த நிலைக்கு போன பக்தனுக்கு எல்லாம் இறைவன் திருவிளையாடல்னு தோணும். அதனால செய்கிற காரியம் பத்தி பெருமிதமும் இருக்காது துயரமும் இருக்காது. இறைவன் தொண்டை செய்கிற நினைப்பு மட்டுமே இருக்கும். இப்படி எல்லாத்தையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்கிறது சமர்ப்பண பாவம். இது வரணும்.

இப்படி பயிற்சி செய்கிற போதோ இல்லை பக்தி திடமான பிறகோ எந்த நிலையிலும் நம்ம சமூக வாழ்கையை புறக்கணிக்கவே வேண்டாம். ஆனால் கர்ம பலன் முழுதும் ஆணடவனுக்கு கொடுத்துடணும்.

---

மதியம் வெள்ளி, ஏப்ரல் 25, 2008

## குழந்தைகள் வளர்ப்பு

இப்போதெல்லாம் குழந்தைகள் வளர்ப்பில் நாம் போதுமான கவனம் கொடுக்கவில்லையோ என்று தோன்றுகிறது. அவர்கள் உடம்பு நல்லாயிருக்கவும் அறிவு படிப்பு மூலமா வளரவும் நிறையவே முயற்சி எடுக்கிறோம். இதுக்கெல்லாம் செலவு செய்ய நாம் தயங்கறது இல்லை. ஆனால் அவங்களோட ஆன்மீக வளர்ச்சிக்கு நாம் ஒண்ணும் செய்வதில்லை. இதை உறுதி செய்துக்க இருக்கவே இருக்கின்றன பள்ளிகள். நாம் கோவிலுக்கு கிளம்பினாலும் ஒரு உபன்யாசம் கேட்க கிளம்பினாலும் அவர்களை விட்டுவிட்டு போகிறோம். காரணம் அவர்கள் நிறைய படிக்க வேண்டி இருக்கிறது; வீட்டுப்பாடம் எழுத வேண்டி இருக்கிறது. அல்லது அவர்களுக்கு பிடிக்காது. பள்ளிக்கு ஆரம்ப நாள் போகும் போது சிரித்துக்கொண்டு போனார்களா? இல்லை இப்பதான் சந்தோஷமாக போறாங்களா? நம்மை நாமே ஏமாத்திக்க இன்னொரு விஷயம் வேற இருக்கிறது. அவங்களே முடிவு செய்து கொள்ளட்டும் என்கிறார்கள். எந்த வயசில்?

தானாக முடிவு எடுக்கிற வயசில் இதற்கெல்லாம் நேரம் இருக்காது. பணத்தின் பின்னே ஓடவே நேரம் போதாது. அப்படியே இருந்தாலும் மனது அதில் போகாது. உலக சுகங்களை நாடியே ஓடும். அதனால் சிறு வயதிலேயே அவர்களை இந்த பக்கம் திருப்பிவிட்டு தினசரி கொஞ்ச நேரம் இதில் மனசை செலுத்த வைக்க வேண்டும். நாம் செய்யும் பூஜை முதலிய கர்மாக்களின் போது அவர்களை சிறு வயதிலிருந்து பக்கத்திலேயே வைத்துக்கொள்ளலாம். அப்போது அது இயல்பாக பழகிவிடும். அந்த சமயம் அவர்களை தொந்திரவு என்று நினைத்து விலக்கி வைத்தால் பின்னால் இப்படி செய் என்று சொல்லும்போது ஏதோ நாம் அவர்கள் சுதந்திரத்தை பறிப்பதாக நினைப்பார்கள். அவர்கள் பெரியவர்களான பின் வேண்டுமானால் நம்பிக்கை இல்லாது போனால் விட்டுவிட்டு போகட்டும். நாம் சரியாக வளர்த்தால் அதற்கு தேவையே இருக்காது. ஆன்மீகத்தில் ருசி வந்து அதன் பலனை அனுபவித்ததால் அது நிச்சயம் திடப்படும்.

---

மதியம் செவ்வாய், ஏப்ரல் 29, 2008

## பக்தர்கள் விலக்க வேண்டியவை

இப்படி செய்கிற காரியங்கள் இயல்பாவே தர்மத்துக்கு புறம்பா இல்லாம நல்ல பலன் கொடுக்கிறதா அமைந்திடும் அப்படின்னு நாரதர் சொல்றார்.

ஸ்திரீ தன நாஸ்திக வைரீ சரித்திரம் ந ஸ்ரவணீயம்

என்கிறார் நாரதர்.

அதாவது பெண்கள், பணம், நாத்திகன், விரோதி இவர்களைப்பற்றிய கதைகளையும் வர்ணனைகளையும் கேக்காதேன்னு நாரதர் சொல்கிறார். இதனால் பெண்களைப்பற்றி இழிவா சொன்னதா அர்த்தம் இல்லை. ஆண்- பெண்கள் நடுவே இருக்கிற ஈர்ப்பைதான் அவர் சொல்கிறார். அப்ப பெண்கள் இதை படிக்கிறப்ப ஆண்கள் பத்திய வர்ணனைன்னு படிச்சுக்கணும்.
அப்படிப்பட்டவை காமத்தை தூண்டும். காமம் காட்டுத்தீ போல வலிமையானது, கொடியது. விட்டா மனிதனை அணுஅணுவா எரிச்சு மன ஆற்றல்களையும் ஆன்ம பலத்தையும் உ றிஞ்சிடும். சாதகர்கள் பலர் ஆண்டவன் வைக்கிற இந்த பரீட்சையில்தான் தோத்து போயிடுவாங்க. விஸ்வா மித்திரர் பட்ட பாடுதான் தெரியுமே. எப்படிப்பட்ட தபஸ் என்னவாச்சு? பெரிய பெரிய ஞானிகளைக்கூட கண நேரத்தில நிலை தடுமாற வைக்கிற சக்தி இதுக்கு இருக்கு.

அதனால சாதனைல இருக்கிறவர் சமூகத்தில வாழ்ந்து செயல்பட்டு வரும் போது இந்த அபாயம் குறித்து விழிப்போட இருக்கனும்.

நாரீஸ்தன பர நாபி தேசம் த்ருஷ்ட்வா மாகா மோஹாவேசம்

ஏதன் மாம்ஸவ சாதி விகாரம் மனசிவிசின்தய வாரம் வாரம்

சங்கரர் பஜகோவிந்தத்துல எச்சரிக்கிறார்.

செல்வம் இன்னொரு கவர்ச்சி. இது போகம் என்கிற அனுபவிக்கிறதுல தூண்டுதல் உண்டாக்கும். சாதனை சலித்துப்போகும். ஆன்மீகத்தில் முன்னேற்றம் தடை படும். புலன்கள் இச்சைக்கு தீனி போடும். மன நிறைவு வராது. மேலும் மேலும் செல்வம் சேக்கணும் என்கிற நினைப்பு வந்திடும். இதனால சம நிலை போய் சாந்தி போயிடும்.

அப்படின்னா பணமே வேண்டாம்னு அர்த்தமா?

அப்படி இல்லை. அதை தேடி ஓடாம நாம இருக்கிற வேலைல நம்ம கர்ம வசத்தால் என்ன கிடைக்குதோ அதுல நிறைவா இருக்கப்பாக்கணும்.

யல்லபதே நிஜகர்மோ பாத்தம் வித்தம்

தேன வினோதய சித்தம்

சங்கரர்தான் திருப்பியும்.

நாத்திகர் பத்தி காதுல போட்டுக்காதேன்னு அடுத்து சொல்கிறார்.

அது இயல்பாகவே உலக வாழக்கைல பற்று உண்டாக்குவது. சாதனைல இறங்கும் முன்னால எவ்வளோ வேணா யோசிக்கலாம். தீர்மானம் செஞ்சு இறங்கிட்டு அப்புறம் திருப்பியும் இந்த விசாரணைல இறங்கினா குழப்பம்தான் மிஞ்சும்.

அடுத்து அபிமானம் என்கிற அகந்தை.

---

மதியம் செவ்வாய், ஏப்ரல் 29, 2008

அகந்தை, டம்பம்

அடுத்து அபிமானம் என்கிற அகந்தை.

செய்கிற அத்தனையும் நானே செய்யறேன் என்கிற நினைப்பு. இது தமோ குணத்தை அடிப்படையா கொண்டு எழும்புகிற ராஜஸ குணத்தோட இயல்பு. நாம் செய்கிற காரியம் சிறப்பா இருக்குன்னா அதுக்கு நான்தான் காரணம் என்று நினைக்கிற ஆசாமி அறிவு கலங்கி இறைவனை அடைகிற முனைப்பு இல்லாம போவான்.

நர ஜன்மத்துலதான் ஆன்மிக சிந்தனைகள் வந்து முன்னேற முடியும். அதை இப்படி வீணாக்கிக்கிறதுல பலன் இல்லை.

அதனால அகந்தை போகணும். நான் செய்கிறேன் என்கிற நினைப்பு போய் பகவான் செய்கிறான் , நான் அதுக்கு ஒரு கருவிதான்னு உணரணும்.

டம்பம்

பகட்டி திரியறான்னு சொல்கிறோமே அதான் இது. ஆடம்பரமான வெளிப்பாடு.

சாதாரணமா செய்கிற ஒரு வேலையை நிறைய விளம்பரம் பணம் செலவோட செய்கிறது. சிலர் ஆயிரம் ரூபாய் செலவழிச்சு வாங்கின நோட்டுப்புத்தகங்களை இரண்டாயிரம் செலவழிச்சு விழா எடுத்து வினியோகம் செய்யறாங்களே அது போல.

டம்பம் சத்தியத்துக்கு வெகு தொலைவுல சாதகனை தள்ளிடும். எளிமையும் இனிமையும் போய் வன்மையும் கசப்பும் ஒட்டிக்கும். அப்படின்னு நாரதர் சொல்றார்.

மத்த தீய சமாசாரம் எல்லாம் விலக்குன்னு பொதுவா சொல்றார் நாரதர்.

அப்ப எதுடா தீயது லிஸ்ட் போடுன்னா......

எதெல்லாம் மனசை புலன்கள் பின்னால துரத்துதோ அதெல்லாம்தான் கெட்டதுன்னு அனியாயமா சொல்கிறார்.

:-))

---

மதியம் புதன், ஏப்ரல் 30, 2008

எல்லா தீமைகள், நற்கருமம்

ம்ம்ம்ம்....
சரி ஏன்தான் அப்படி சொல்கிறார்னு பாக்கலாம்.

> த்யாயதோ விஷயான் பும்ஸ: ஸங்கஸ்தேஷூ பஜாயதே.
> ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோதோs பி ஜாயதே
> கீதை 2-62

பொருட்களை நினைச்சா பற்று வரும். பற்று வந்தா ஆசை வரும். ஆசை (தீர்க்க முடியலைனா) சினமா வடிவெடுக்கும்.
தீ தொட்டாத்தான் சுடும். விஷம் சாப்பிட்டாத்தான் கொல்லும். ஆனா புலன் உணர்ச்சிகள் நினைத்த மாத்திரத்துல நிலை குலைய வைக்கும்.

"சரிப்பா, நான் நல்லதே நினைக்கிறேன்" அப்படின்னா அதையும் கண்டிக்கிறாங்க. அத பொன் விலங்கு என்கிறாங்க. தீய எண்ணம் இரும்பு விலங்காம். இப்படி ராம கிருஷ்ணர் சொல்லி இருக்கார்.
இத பாத்து எல்லாம் பயப்படாதீங்க. அந்த நிலை ரொம்ப தூரத்துல இருக்கு. முதல்ல தீய எண்ணங்கள துரத்திட்டு அப்புறமா நல்ல எண்ணங்களை பத்தி யோசிக்கலாம்.

மேலே போலாமா?
சினத்தால மனக்குழப்பம்; குழப்பம்தால நினைவு இல்லாமை; நினைவு நாசமாச்சுனா புத்தி நாசம்; புத்தி போச்சுனா மனுஷன் அழிவான்.

இப்படி தீமைகள் ஒண்ணொண்ணா அடுத்தடுத்து வந்து மனுஷனுடைய வீழ்ச்சிக்கு காரணமா ஆயிடும்.

> க்ரோதாத் பவதி ஸம்மோஹ:
> ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம:
> ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்தி நாசோ
> புத்தி நாசாத் ப்ரணஸ்யதி

இதனாலதான் நாரதர் மத்த தீமைகளிலிருந்து விலக்குன்னு சொல்கிறார்.

கிரியை:

இதை நற்கருமம்னும் சொல்லலாம். இது சத்வ குணத்திலேந்து வருது. இதையே கல்யாணம்னு சொல்கிறாங்க. ராமானுஜர் "இது இருந்தா சத்தியத்தோட கூடிய தூய்மை நேர்மை அன்பு அகிம்சை தர்மம் இதெல்லாம் இருக்கும்" னு சொல்றார்.
இதுக்கு உடல் உள்ளம் சொல் மூணுமே தூய்மையா இருக்கனும். எதை நினைக்கிறோமோ அதையே சொல்லனும். எதை சொல்லறோமோ அதையே செய்யனும்.
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்
னு ராமலிங்க வள்ளலார் சொன்னது போல.

சத்யோ நாஸ்தி பரோதர்ம - சத்தியத்துக்கும் உசத்தியான தர்மம் இல்லைங்கிறது வேதங்கள். சத் சித் ஆனந்தமான அந்த பரமாத்மாவை உணரனும்னா நம் வாழ்வு சத்திய நெறில இருக்கனும். அந்த சத்திய தாகம் வெளியுலக கவர்ச்சியால சரிஞ்சு போகிறதா இருக்கக்கூடாது. எப்ப நம் உள்ளம் உள் பக்கம் திரும்பறதோ அப்ப சக்தி அதிகமாகும். உள்ளம் வெளிப்பக்கம் திரும்பறப்ப சக்தி செலவாகும். பலவீனமாகும். மனசு அப்படி பலவீனமானா சத்தியத்தோட நடக்கிறது அவ்ளோதான். அதனால புலன்களால அனுபவிக்கிறதுல பற்று போற வரை சத்திய வாழ்வு அமையறது கஷ்டம்.
இதையல்லாம் தியாகம் செய்கிறதாலதான் ஆன்மீகத்தில் முன்னேற முடியும்.
அதனால சாதகன் சத்தியத்தோட வாழ பயிற்சி செய்யனும்னு ராமானுஜர் சொல்கிறார்.

---

மதியம் வியாழன், மே 1, 2008

## ஹெவியா போகாம தடுக்க ஒரு ப்ரேக்!

*பதிவுகள் கொஞ்சம் ஹெவியா போறதா மௌலி சொல்லி இருந்தார்.*
*ஒரு பட்டியல் போட்டு அதைப்பத்தி பேசறப்போ கொஞ்சம் தவிர்க்க முடியாம போச்சு. கதை*

---

*ஏதாவது போடலாம்னா எழுதறது அதுக்கு தோதா இல்லை. சரின்னு ஒரு சின்ன ப்ரேக்.*

----------

1. பயிற்சி: அசையாத மனசோட எப்போதும் தொடர்ச்சியாக கடவுளை நினைச்சுக்கிட்டே இருப்பது. அதெப்படி எப்பவுமே நினைக்க முடியும்ன்னா, முடியும். வழியை அப்புறமா பாக்கலாம். இப்படி முன்னால எழுதி இருந்தேன் இல்லையா?

அது எப்படின்னு பாக்கலாமா?

இதுக்கு உறுதுணையா இருக்கிறது நாமஜபம். நமக்கு பிடிச்ச இஷ்ட தேவதையோட பெயரை திருப்பி திருப்பி சொல்லறது. அதுலேயே பல விதங்கள் இருக்கலாம். உதாரணமா கண்ணா, மாதவா, கோவிந்தா, இல்லை சிவ சிவ இல்லை கந்தா கந்தா முருகாமுருகா இப்படி. ஒரே கடவுளின் எந்த பெயரை வேண்ணா சொல்லலாம். ஆரம்பத்துல தனியா உக்காந்து இதை மட்டும் சொல்லி பழகணும். பிறகு பல வேலைகளோட கோத்து பழகணும். உதாரணமா சமைக்கும்போது (ரங்கமணிகளுக்கும்தான்) நாம ஜபத்தோடயே சமைக்கலாம். அது உணவுல சேர்ந்து நல்ல பலன் தரும். இல்லை பைக்லே ஆபீஸ் போகும்போது.

இப்படி எல்லாம் சொல்லலாமா? எப்போ வேண்ணா சொல்லலாமா? நான் சுத்தமா இல்லையே? இப்படி எல்லாம் கேள்வி வரும்.

விடை நிச்சயம் சொல்லலாம்; சொல்லணும்.

பிரணவத்தோட சேர்க்காத நாமத்தை யார் எங்கே வேணுமானா சொல்லலாம்.
இப்படியே பழக பழக ஒரு ஆச்சரியமான சமாசாரம் நடக்கும். அந்த பேர் மனசிலே எப்பவுமே ஓடும். நாம் பேசும்போது, நடக்கும்போது, வேலை செய்யும்போது....
இது எப்படி?

மனசை புரிஞ்சுக்க முயற்சி பண்ணலாம். அது ரொம்பவே வினோதமானது.
ஜபம் செய்ய உட்கார்றோம். செய்ய ஆரம்பிக்கிறோம். சில நாள் கவனமா செய்கிறோம். புதுசு இல்லையா? செய்யும்போது கவனம் சிதறி எங்கோ தோசை வடை சினிமான்னு போயிடுது. வருத்தப்படறோம். திருப்பி ஜபம் செய்ய ஆரம்பிக்கிறோம். இப்ப கொஞ்ச நேரம் நிலைச்சு இருக்கு. ஆனாலும் திருப்பியும் எங்கோ போயிடுது. இப்படி ஓடுகிற மனசை திருப்பி திருப்பி ஜபத்துக்கு கொண்டு வரணும். இப்படி சில நாட்கள் போன பிறகு.... ஜபம் செய்கிறோம். மனசு எங்கோ போய்விட்டது. திருப்பி மனசை ஜபத்துக்கு கொண்டு வரப்பாக்கிறோம். அட! இது என்ன? அந்த ஜபம் உள்ளே ஓடிகிட்டுதான் இருக்கு! இப்படி ஜபம் செய்ய, கவனம் சிதற- திருப்பி திருப்பி நடக்குது.

எப்படி இது?

மனசில பல லேயர்கள் இருக்கு. அதுல ஒவ்வொரு லேயரிலேயும் ஒன்னொண்ணு நடக்கும். ஜபம் ஓடற லேயர் ஒண்ணு. சாதாரணமான நினைவுகள் அலையறது ஒண்ணு.
எப்ப எல்லா லேயர்லேயும் ஒரே விஷயம் ஓடுதோ அப்ப முழு கான்சன்ட்ரேஷன் வந்தாச்சு.
பாண்டிச்சேரி போயிட்டு என் நண்பனும் நானும் மோட்டார் சைக்கிள்ல திரும்பி வந்து கொண்டு இருந்தோம். அப்ப அவன் ஒரு ஆம்புலன்ஸ் ஐ காட்டி,"இதுல ஆம்புலன்ஸ் ன்னு "தலை கீழா" தெரியறா மாதிரி எழுதி இருக்கு இல்லையா? ஏன்னு தெரியுமா?" ன்னு கேட்டான்.
இது தலை கீழா இல்லையேன்னேன். சரி, சரி, வித்தியாசமா இருக்கில்ல? ஏன் ன்னு கேட்டான். அதுக்கு நான் விடை இப்ப தெரியலை. நான் கடலூர் பாலம் தாண்டறத்துக்குள்ளே சொல்லறேன்னு சொன்னேன். பிறகு பலவிதமான விஷயங்களை பேசிகிட்டே வந்தோம். திடீன்னு நான் டேய் உன் கேள்விக்கு ஆன்சர் இதுதான். ஆம்புலன்ஸ் ன்னு முன்னால போற வண்டிகளோட ரியர் வியூ கண்ணாடில சரியா தெரியணும். அதனால அதுக்கு தக்க படி எழுதி இருக்கு ன்னு சொன்னேன்.

உனக்கு விடை தெரிஞ்சது ஆச்சரியம்தான் ன்னு யாரோ முணு முணுக்கிறாங்க. அது சரிதான். இருந்தாலும் ஆச்சரியமான விஷயம் நாங்க அப்ப பாலத்தை கடந்துகிட்டு இருந்தோம் என்கிறதுதான்.

இந்த மாதிரி எப்படி நடக்கிறது? பல விஷயங்களை பேசிகிட்டு வந்தாலும் மனசு கேள்விக்கான பதிலை தேடி பிடிச்சு விட்டது. பிறகு காத்திருந்தது. நானோ அதை சீண்டவே இல்லை. பாலம் வருகிறதுன்னு அதுக்கு தெரிஞ்சதும் அதுவே ஒரு எண்ணத்தை வெளியே கிளப்பி விட்டது. விடை வெளியே வந்து விட்டது.
என்னத்துக்கு சொன்னேன்? மனசில பல லேயர்கள் இருக்கு. அவை வேலை செஞ்சுகிட்டே இருக்கும். அவை கவனத்துல இல்லைங்கிறதால் இல்லாம போகாது. திடீர்ன்னு மேலே வரும்.

அது போல நாம் ஜபம் பழக பழக அது உள்ளே ஓடிகிட்டே இருக்கும். நான் காலை ஆஸ்பத்திரி போகும் போது ஒரு ஜபம் செய்ய பழக்கி இருக்கேன். அது நான் காலை பைக் ஓட்ட ஆரம்பிச்சதும் ஆரம்பிச்சு போய் சேருகிறவரை தானா ஓடும். அதே போல மாலை வேற ஜபம்.

இதுல என்ன பிரச்சினை?

1. தனியா ஜபம் செய்யறது விட்டு போச்சுனா இதுவும் மௌனமாவே காணாம போயிடும். சில மாசங்கள் கழிச்சு திடீர்ன்னு முழிச்சுப்போம். ஜபம் எங்கேடான்னு பாத்தா காணாம போயிருக்கும். அது அப்பதான் தெரியும்.
2. எந்த செயலோட இணைச்சு இருக்கோமோ அந்த செயல் ஏதோ ஒரு காரணத்துக்காக நின்னு போச்சுனா இதுவும் நின்னுடும்.
இந்த ரெண்டு விஷயங்களிலேயும் கவனமா இருந்தா இந்த ஜபம் நல்ல பலன் தரும்.

சீக்கிரமே உஜாலாக்கு மாறிடலாமா?
பி.கு
உங்க மனசுல இருக்கிற லேயர் எத்தனை? பாத்து இருக்கீங்களா?

---

மதியம் வெள்ளி, மே 2, 2008

நேர்மை, அன்பு

நேர்மை

பலவார்த்தைகளை ஏறக்குறைய ஒரே மாதிரி பொருள் செய்துக்கிறோம் நாம். சத்தியம் நேர்மை ஒரே மாதிரி இருக்கில்லே?

நன்னடத்தைதான் நேர்மை. எல்லா சூழ்நிலையேயும் நேர்மையை கடைபிடிக்கனும்.
பல பேர் சாதாரணமா இருக்கிறப்ப நேர்மையா இருப்போம். அதுவே ஒரு இக்கட்டுன்னா நேர்மையா இருப்போமாங்கிறது சந்தேகமே.
இருந்தாலும் இதை ஒரு அடிப்படை அறமா சொல்கிறாங்க.

இறைவனை நம்பறதுல பகட்டில்லாத நேர்மை; அவன் பேரை சொல்கிறதுல நேர்மை; மகான்களுக்கு செய்கிற தொண்டில நேர்மை. இப்படின்னு ஒத்தரோட உலகியல் வாழ்வு இறையியல் வாழ்வு இரண்டிலேயும் நேர்மையை கடைபிடிச்சா சாதனைல உயரலாம். இதுவெல்லாம் சுலபமில்லைதான். ஆனால் இறை நம்பிக்கையால இதை சாதிக்கணும்.

அடுத்து அன்பு.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்

என்பு தோல் போர்த்த உடம்பு

அன்பில்லாத ஆள் சும்மா தோல்போத்திய எலும்பு கூடுதானேங்கிறார் வள்ளுவர்
சங்கரரும்

மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹா புருஷசம்ஸ்ரயம்
துர்லபம் தேவானுக்ரஹ ஹேதுகம்

அப்படின்னு விவேக சூடாமணில சொல்கிறார். இதுல மனுஷ்யத்வம் என்கிறது அன்பின் அடிப்படையில்தான்.

இந்த அன்பு வெறும் கவர்ச்சி/ மோகம் /பற்றால வரதில்லை. தன்னலமில்லாத தியாகம் தூய்மையான வாழ்வு இதன் அடிப்படைல வரதுதான் அன்பு.

சுய நல அடிப்படையா இருந்தா அதுக்கு இவ்வளோதான்னு ஒரு வரம்பும் துயரமும் கலந்தே இருக்கும்.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிர்க்கும் தம்முயிர் போல் எண்ணியுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாரவர் உளந்தான்
சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம் புரியும் இடமென நான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கு ஏவல் புரிந்திட என் சிந்தை மிக விழைந்ததாலோ

வள்ளலார்தான் சொல்கிறார்.

வித்தையும் வினயமும் இருக்கற பிராம்ஹணன், பசு, யானை, நாய், நாயைச் சாப்பிடற புலையன் இவை எல்லாத்தையும் ஞானிகள் சமமான பார்வையிலேயே பார்க்கிறாங்கன்னு கிருஷ்ணன் சொல்கிறான். கீதை 5-18

இந்த மாதிரியாக ஞானம் அன்போட முதிர்ச்சில வரும். இந்த மாதிரியான ஞானிகளுக்கு செய்கிற தொண்டையே ரொம்ப உயர்ந்ததா சொல்கிறாங்க.

சாதகன் தூய அன்பை வளத்துகிறதால, "தான்" என்கிற சின்ன வட்டத்துலே இருந்து விடுவிச்சுக்கிட்டு மற்றவங்களுக்கு ன்னு வட்டம் விரிஞ்சு பிறகு இறைவன் படைச்ச உயிர்கள் எல்லாத்து மேலயும் அன்பு காட்டுகிறதா ஆகி விடுவான். இது இறை தரிசனம் பெற பெரிய துணையா ஆகும்.

யாரால தன்னலமில்லாத தூய அன்பை உணர முடியலையோ அவரால இறைவனை உணர முடியாது.

---

மதியம் திங்கள், மே 5, 2008

அஹிம்சை

அஹிம்சை.

மத்தவங்களுக்கு துன்பம் செய்யாம இருக்கிறதும் மத்தவங்க நமக்கு செய்கிற துன்பத்தை பொறுத்து மன்னிக்கிறதும் அஹிம்சை.

ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்

அப்படின்னு வள்ளுவர் சொல்கிறார்.
பெறும் ஜீவ காருண்யம் அஹிம்சை இல்லை. சாந்தியும் சகிப்புத்தனமையும் இருக்கணும்.

துறவி ஒத்தர் குளிக்கப்போனார் ஆறுல முங்கி குளிச்சு வெளியே வரப்ப ஆத்து தண்ணில சிக்கி தத்தளிக்கிற தேள் ஒண்ணை பாத்தார். பாவமே ன்னு அதை வெளியே எடுத்து விட போனார். தேள் கண்டதா இவர் உதவி செய்யறார்னு? அதோட இயல்பு கைல கொட்டிடுச்சு. கை தானா உதற தேள் திருப்பியும் தண்ணில விழுந்து தத்தளிச்சது. துறவி திருப்பியும் அதை வெளியே எடுத்து விடப்போக அதே கதை ஆச்சு.

ஆனா துறவி அதை வெளியே எடுத்து விடற முயற்சியை கைவிடலை. சில பல தடவை கொட்டினப்பறம் ஒரு வழியா வெளியே எடுத்து விட்டார். இதெல்லாம் கரைலேந்து பாத்துக்கிட்டு இருந்த ஒத்தர் துறவிய கேட்டார்:
ஏன் சாமி அது கொட்டினப்பவே சும்மா விட வேண்டியதுதானே. திருப்பியும் திருப்பியும் ஏன் அதுக்கு உதவி செய்ய போய் கொட்டு பட்டீங்க?
துறவி சிரிச்சுக்கிட்டே சொன்னார். கஷ்டப்படறவங்களுக்கு உதவி செய்யறது இயல்புதானே?
அதுக்குன்னு அது கொட்ட கொட்ட நீங்க ஏன் அதை எடுத்து விட போகணும்?
அது எங்கேயாவது அதோட இயல்பை விட்டுதா? ஆறு
அறிவு இருக்கிற நாம ஏன் விடணும்?

நமக்கு ஒத்தர் கெட்டது செஞ்சு விடறார். கோபமா வருது. அதுக்கு அவரை தண்டிக்கலாம்தான். ஆனா கஷ்டப்பட்டு அடக்கிக்கிறோம். இது அஹிம்சைதானா? அதாவது வர்ர கோபத்தோட கஷ்டப்பட்டு பொறுக்கிறது அஹிம்சை இல்லை. பொறுக்கிற நேரத்தில மனசு சாந்தமா இருக்கிற அளவு முன்னேறனும். அஹிம்சாவாதி எப்பவும் நினைக்கறது சொல்கிறது செய்கிறது ஒண்ணாவே இருக்கும்.
இந்த தூய்மை ஆன்மீகத்தில் மிக முக்கியம்.

ஆன்மீக சாதனையில் தேவையான உயர்ந்த குணங்களை பட்டியல் போடலாமா?

> அஹிம்ஸா ப்ரதமம் புண்யம் புண்யம் இந்திரிய நிக்ரஹ:
> ஸர்வ பூத தயா புண்யம் க்ஷமா புண்யம் விசேஷத:
> ஞானம் புண்யம் தப: புண்யம் த்யானம் புண்யம் ததைவ ச
> ஸத்வம் அஷ்டவிதம் புண்யம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்

அஹிம்ஸை முதலில் சொன்னதை கவனிக்கணும்.
இந்திரிய நிக்ரஹம் என்கிற புலனடக்கம் அடுத்து. சர்வ பூத தயை என்கிற உயிர் கருணை.
வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடின வள்ளலார் போல.
அடக்கம் அமரருள் உய்க்கும் என்றபடி க்ஷமா என்ற பொறுமை.
இந்த ஜடமான உடல் நானில்லை. அதை உள்ளிருந்து இயக்குகிற இயங்கு சக்தியான ஆத்மாதான் நான் என்கிற ஞானம்.
மனசை அடக்கி புலன்களை ஜெயித்து செய்கிற தவம்.
மனசை ஒரு நிலை படுத்தி சித்த சுத்தி பயிற்சி பண்ணி உபாசனா மூர்த்தியை லயிக்கப்பண்ணும் த்யானம்.

கடைசியாக சத்வம் என்கிற உயர்ந்த சீலம்.

---

மதியம் செவ்வாய், மே 6, 2008

கனக தாசர் -மனதின் சக்தி

வழிகள் பலவா இருந்தாலும் தானே வரும் விளைவுகள் இங்கேயும் அங்கேயும் இருக்கலாம். பக்தி ஞானத்தில் கொண்டு விடலாம். கர்ம யோகியோட குண்டலினி எழும்பலாம். ஞானி பக்தி

பண்ண ஆரம்பிக்கலாம்.
உதாரணத்துக்கு ஒரு கதையை பாக்கலாம்.

மகாராஷ்ர மாநிலத்தில ஒரு ஆட்டிடையர். பெயர் கனகதாசர். கிருஷ்ணன் மேல ரொம்ப பிரியம். ஆடுகளை மேய விட்டுவிட்டு மனசாலேயே ககினெலே க்ருஷ்ணனுக்கு பூஜை செய்வார். பாட்டு பாடுவார். அவன் சிந்தனையாவே இருப்பார்.

வ்யாஸ ராயர்னு ஒத்தர். அந்த நாட்டு மந்திரி. அரசருக்கு அவர் மேல ரொம்ப மரியாதை. அப்படிப்பட்ட மகான் வ்யாஸ ராயர் ஒரு முறை பல்லக்குல ககினெலே பக்கம் போய்கிட்டு இருந்தார். கூடவே அவரது பரிவாரம். பரிவாரத்தில நிறைய வேத வித்துக்கள், புலவர்கள். போகிற வழியிலே ஒரு துளசிக்காடு வந்தது. மைல் கணக்கா அருமையான துளசி செடிங்க. அதை பார்த்த ராயருக்கு ஒரே சந்தோஷம். உடனே அதை கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய நினச்சார். மனசாலேயே ஒரு துளசி மாலை கட்டினார். அதை மனசாலேயே ககினெலே கிருஷ்ணனுக்கு போடும் போது.... அட இதென்ன மாலை ஒரு பக்கம் சரியா படியலையே!

வ்யாஸ ராயருக்கு ஆச்சரியமா போச்சு. நாம செய்தது கற்பனைதானே? அதில ஏன் இப்படி? சரின்னு திருப்பி அதேபோல மாலை மனசால கட்டி போட திருப்பியும் அதே போல படியலை. படு ஆச்சரியமான ராயர் பல்லக்கிலிருந்து தலையை வெளியே நீட்டி அறிஞர்களை கூப்பிட்டு விஷயம் சொன்னார். யாருக்காவது ஏன் இப்படின்னு தெரியுதான்னு கேட்டார். எல்லாரும் ஒத்தரை ஒத்தர் பாத்துக்கிட்டாங்க. யாருக்கும் காரணம் தெரியலை. இவ்வளளவு பெரிய அறிஞர் கூட்டத்துக்கே பிடிபடாத இது என்னவா இருக்கும்ன்னு யோசிக்க ஆரம்பிச்சார். பல்லக்கு போய்கிட்டு இருந்தது.

அப்ப கனகதாஸர் அவசர அவசரமா அங்க ஓடி வந்தார். சாமீ! சாமீ! ன்னு கூப்பிட்டார். பரிவாரங்கள் "என்னடா இது? ஒரு ஆட்டிடையன் நம்ம எஜமானரை கூப்பிடறான்" னு பாத்தாங்க. ராயரும் வெளியே எட்டிப்பாத்தார். கனகதாஸர் ,"சாமீ க்ருஷ்ணன் கையிலே மத்து சாத்தியிருக்கு. அது துளசிமாலைய சரியா படியாம தடுக்குது. மாலைய கொஞ்சம் தள்ளி போட்டா சரியாயிடும்" ன்னு சொன்னார். இதை கேட்ட எல்லாருக்கும் ஆச்சரியம். என்னடா இது ராயர் மனசில மாலை செஞ்சு போட்டா இவனுக்கு எப்படி தெரிஞ்சது? ராயரும் ஆச்சரியப்பட்டு கண்ணை மூடிக்கிட்டு இன்னொரு மாலையை மனசால பண்ணி கொஞ்சம் தள்ளிப்போட அது சரியா படிஞ்சது. "ஏனப்பா யாருக்கும் தெரியாத இந்த சமாசாரம் உனக்கு எப்படி தெரிஞ்சது?"ன்னு கேட்டார். "அதுவா சாமீ! நீங்க மாலை போடறப்ப நான் அவனுக்கு பூஜை பண்ணிக்கிட்டு இருந்தேன். அதனால தெரிஞ்சது" ன்னார் கனகதாஸர்.

மனசோட சக்தி இந்த அளவு இருக்க முடியும்.

---

மதியம் புதன், மே 7, 2008

சத்வம், தர்மம், அனவஸ்தை,அனுதர்ஷம்.

கடைசியாக சத்வம் என்கிற உயர்ந்த சீலம்.

எப்பவும் சோம்பலோட தூங்கி வழிஞ்சுகிட்டு சும்மா இருக்கிறது தமஸ்.
இது எப்படி சரியாகும்? ஆள எழுப்பி ஏதாவது வேலைல இறக்கினா சரியாகும்.
ஏதாவது வேலை செய்துக்கிட்டே, கோபப்பட்டுக்கிட்டே இருக்கிறவரை என்ன செய்யறது? அட கொஞ்சம் அமைதியா இருப்பான்னு சொல்லி சரி பண்ணலாம்.
அதாவது-
செயல் இல்லாம இருக்கிற தமஸ் ஐ ராஜஸ குணத்தால ஜெயிக்கணும். அதை சத்வ குணத்தால ஜெயிக்கணும். அப்படி செய்தா மனசு எப்பவும் சாந்தமா அலை கழியாம இருக்கும். இதுவே இறை உணர்வை இதயத்துல நிரப்பி பக்தியோட உயர்ந்த நிலைக்கு சாதகனை கொண்டு போகும்.

தர்மம் என்பது நம் பெரியவங்களும் சாஸ்திரங்களும் எதை சரின்னு ஒப்பு கொண்டதோ அதுதான். அதுக்கு மாறா செய்கிற எதையும் பெரியவங்க ஒத்துக்க மாட்டாங்க. "தர்மோ ரக்ஷதி ரக்ஷித:" என்ற படி யார் தர்மத்தை காக்கிறாங்களோ அவங்களை தர்மம் காக்கும். இங்க காக்கிறதுன்னா என்ன? நாம தர்மத்தை காப்பாத்தறதாவது?
தர்மத்தை கடைபிடிக்கனும். அதுதான் காக்கிறது.

அடுத்து வர அனவஸ்தை பக்குவமான மனநிலையை சாதகனுக்கு கொடுக்கும். இத வச்சே சாதகனோட பக்குவத்தை எடை போடலாம். எப்ப எல்லா இடத்திலேயும் பரம் பொருளை சாதகன் பாக்கிறானோ அப்ப எப்பவுமே சந்தோஷமா இருப்பான். மனசில குறை எல்லாம் போய் நிறைஞ்சு இருக்கும்.

இது எப்படி கிடைக்கும்னா....
இது நமக்கு இயல்பானதுதான். ஆனால் இந்த நிலைலேந்து புலன்களால அனுபவிக்கிற ஆசையும் வெளிப்புற சூழலும் நம்மை வேற எங்கயோ இழுத்துப்போக நாம அனுமதிக்கிறோம். பக்தியால வெளிப்பக்கம் போகிற புலன்களை உள்ளே திருப்பி வெளிப்புற சூழலையும் ஜெயிச்சா இயல்பான ஆனந்தத்தை அனுபவிக்கலாம்.

அனுத்தர்ஷ என்கிற மிகையான களிப்பு அடையாமை அடுத்தது.

இது கொஞ்சம் ஆச்சரியமா இருக்கலாம். சாதாரணமா எல்லாரும் சந்தோஷமா இருக்க விரும்பறாங்க? அது இருக்கலாம், ஆனா அளவுக்கு மேலே போக வேண்டாம்னு சொல்கிறாங்க. இன்பத்தையும் துன்பத்தையும் சமமா பாக்க கத்துக்கன்னு சொல்கிறார் கிருஷ்ணன்.

> து:கேஷ்வனுத் விக்ன மனோ:ஸுகேஷு விகதஸ்ப்ருஹ:
> வீத ராக பய க்ரோத:ஸ்திததீர் முனிருச்யதே -கீதை 2-56

துன்பத்தில் துயரடையாத, இன்பத்தில் வேட்கை இல்லாத, பற்று- அச்சம்- சினம் இவை இல்லாத, உறுதியான உள்ளம் உடையவனே முனி எனப்படுவான்.
சுருக்கமா சொன்னா இச்சைகளை அடக்கி ஆள்கிறவனே அதிக சந்தோஷத்துல அகப்பட மாட்டான். அவன் ஆத்ம ஞானத்தையும் பெறுவான்.

---

மதியம் வியாழன், மே 8, 2008

பக்தியின் எல்லையிலே!

எதை பற்றி நிற்கிறோமோ அதுவே நமக்கு கிடைக்கும். அழியற விஷயங்களை பற்றி நிக்கிறது அழிவை நோக்கித்தான் செலுத்தும். அப்படி இல்லாம பரம் பொருள் மேல பற்று வச்சா அதை நோக்கி போவோம். அந்த அன்புதான் உண்மையான அன்பு. இதுதான் நம்மோட புலன்களுக்கு அகப்படாத பெரிய இன்பத்தை அனுபவிக்க வழி காட்டும்.

சாதனைல ரொம்ப முன்னேறிய பக்தன் தன் உடலை பத்திய நினைப்பு இருக்கிற வரை இறைவனோட குணங்களையும் அழகையும் வர்ணித்து பேசுவான். உடலை பத்திய நினைப்பு போயிட்டா விவரிக்க முடியாத நிலைக்கு போயிடுவான். இது ஞான விஷயமாயிடும். வழி எல்லாம் நம்ம வசதிக்குத்தான் பிரிச்சுக்கிறோம். க்ராஸ் ஓவர் இருக்கும்னு பாத்தோம் இல்லையா?

பூரணமா நிபந்தனை இல்லாம அன்பு இருக்கிற இடத்திலே தன்னைத்தானே அறிஞ்சு கொள்கிற உயர்ந்த ஞானம் தானா அமைந்திடும். *அன்பும் ஞானமும் அவற்றோட முடிவுல ஒண்ணேதான்.*

பாகவதம் சொல்லுது "ஆத்மானந்தத்துல ஆழ்ந்து கிடக்கிற ரிஷிகள் தங்களோட பந்தத்திலிருந்து விடுபட்டு நின்னும் பகவான்கிட்டே வேற கோரிக்கை இல்லாம, அன்பு

காரணமாவே அன்பு செலுத்தறாங்க.”

பிரகலாதன் தன்னை மறந்து இருந்தப்ப பிரபஞ்சத்தையே காணவில்ல. பெயரோ உருவமோ இல்லாத ஒரு நிலையே தெரிஞ்சதாம். எப்ப தான் பிரகலாதன் அப்படின்னு தோணிச்சோ அப்ப பிரபஞ்சமும், அதுக்கு தலைவனான எல்லை இல்லாத புண்ய குணங்களோட நிலலையுமா ஆன பிரபுவும் புலப்பட்டாங்களாம்.

கோபியர்களும் அப்படித்தான். தாங்கள் யார்ன்னு தெரியாம கிருஷ்ணனாகவே இருந்தாங்களாம். தான் என்கிற நினைப்பு வந்த போது கிருஷ்ணன் பூஜிக்க தகுந்தவனாயும் இவர்கள் கோபியர்களாயும் ஆனாங்களாம். அப்ப கிருஷ்ணன் புன்னகையோட மன்மதன் போல அவங்க எதிர நின்னானாம்.

பரம் பொருள்கிட்ட இருந்து விலகி நின்னா அது பக்தி. ஒன்றி போனா அதுவே ஞானம். ஆனா இதுவே ஒரு அஞ்ஞானத்தில கொண்டு விடலாம். பக்தன் சர்வேஸ்வரன் என்கிற கற்கண்டை சுவைக்கத்தான் விரும்பரானாம். அஹம் பிரம்மாஸ்மி ன்னு சொல்லி தானே கற்கண்டா மாற விரும்பறதில்லையாம். ராம கிருஷ்ணர் இப்படி சொல்கிறார்.
`````````

கிருஷ்ணன் தான் வந்த வேலை முடிஞ்சு வைகுந்தம் போக ரெடி ஆயிட்டார். தன்னை உயிருக்கு உயிரா நினைச்ச கோபியர்களை அப்படியே விட்டிட்டு பேகலாமா? அதனால அவர்களை கூப்பிட்டு கேட்டார். "நான் வைகுந்தம் போக வேண்டிய நேரம் வந்தாச்சு. நீங்க என்ன செய்கிறதா உத்தேசம்?”
அவங்க சொன்னாங்க, "நீ போயிட்டா எங்களுக்கு என்ன இங்க வேலை. நாங்களும் உன் கூடவே வரோம்.”
சரின்னு அப்படியே ஏற்பாடு ஆச்சு. கிருஷ்ணனும் வைகுந்தம் போய் நாராயணனோட கலந்தாச்சு. கோபியர்களும் வந்து சேந்தாங்க. வந்ததும் கிருஷ்ணனை தேடினாங்க. காணலை. சில நாள் போனதும் நாராயணன் அவங்களை கூப்பிட்டு அனுப்பினான். "இங்க சந்தோஷமா இருக்கீங்களா? என்ன சேதி" ன்னு கேட்டான். கோபியர்கள் "இங்க எங்களுக்கு நரகமா இருக்கு" ன்னு சொன்னாங்க. "ஏன்?" னு ஆச்சரியமா கேட்டான் நாராயணன்.

இங்க கண்ணனை காணோமே!

நானேதான் கண்ணனா இருந்தேன்னு சொன்னா கோபிகைகள் ஒத்துக்கலை. "சரி, என்ன பண்ணனும்?" ன்னு கேட்டான் நாராயணன். "எங்களை திருப்பியும் பிருந்தாவனத்துக்கு அனுப்பிடு. நாங்க அங்க கிருஷ்ணனை நினைச்சுக்கிட்டே இருந்திடறோம்!" அப்படினாங்க கோபியர்கள்!
அப்படியே ஆகட்டும்னார் நாராயணன்.
~~~~~~~~~~~

சமீபத்தில பிருந்தாவனத்துக்கு போய் வந்தார் எனக்கு தெரிஞ்ச ஒத்தர். ஊரை சுத்திப்பாக்க ஒரு ரிக்ஷா அமர்த்திக்கிட்டார். பெரிய பார்க் ஒண்ணை சுத்திப்பாத்தார் திரும்பி வந்தப்ப என்ன பாத்தேன்னு ரிக்ஷாகாரர் கேட்டார். நிறைய குரங்குகள் இருக்கு. ஒண்ணும் விசேஷமா இல்லையேப்பா ன்னார். அப்படியா. சரி திருப்பியும் போங்க. கொஞ்ச நேரம் அதையே பாத்துட்டு வாங்கன்னார் ரி. காரர். இவரும் சரின்னு போய் உள்ளே உக்காந்தார். குரங்குகளை பாத்துக்கிட்டே இருக்கிறப்ப திடீர்னு ஒரு விஷயம் புரிஞ்சது.

குரங்கு சேட்டைனேதானே பிரசித்தம்? அது சும்மா இருக்காது இல்லியா? ஒரு இடமா இருக்காது. இங்கிருந்து அங்கே தாவும். குதிக்கும். ஏதாவது சேட்டை செஞ்சுகிட்டே இருக்கும்.
ஆனா இந்த குரங்குகளோ அப்படி இல்ல. சிலது ஒரே இடத்துல சும்மா இருக்கும். சிலது கண்ணுல இருந்து கண்ணீரா வரும். சிலது ஒரே இடத்தை சுத்தி சுத்தி வரும். மொத்ததுல
`````````

எல்வாமே வித்தியாசமா இருந்ததாம். நண்பர் ரிக்ஷாகாரர் கிட்ட பாத்ததை சொன்னார். அதுக்கு ரிக்ஷாகாரர் மேலே நாம பாத்த கதையை சொன்னார். இந்த குரங்குகள்தான் அந்த கோபியர்கள். கிருஷ்ணனையே நினச்சுக்கொண்டே இருக்குங்க அப்படின்னார்.

---

மதியம் வெள்ளி, மே 9, 2008

தானம்

கடைசியா தானம். இதுல கொடுக்கிறவர் எவ்வளவு கொடுக்கிறார் என்கிறது அவ்வளவு முக்கியமில்ல. என்ன உள்ளத்தோட கொடுக்கிறார்ன்னு பாக்கணும். கோவில் கட்டறாங்க, திருவிழா நடத்தறாங்க. அதுக்கு ஒரு கோடீஸ்வரன் ஆயிரம் ரூபா கொடுக்கிறது பெரிசு இல்ல. ஒரு அன்னாடங்காச்சி நிறைஞ்ச உள்ளத்தோட ஒரு ரூபா கொடுக்கிறது ரொம்ப பெரிசு.

பக்தர்கள் எல்லா ஜீவ ராசிகள் கிட்டேயும் இறைவனை பாத்தா தன் கிட்ட இருக்கிறா எல்லாத்தையும் அவற்றோட பகிர்ந்துக்கதானே நினைப்பான்?

நாம தேவர் என்று ஒரு பக்தர் மகாராஷ்ரத்துலே. விட்டலனுடைய பரம பக்தர். நிறைய அபங்கங்கள் பாடி இருக்கார்.
(அபங்கம் என்கிறது நம்ம தேவாரம் மாதிரிம். பக்தி பாடல்கள்.)
வாழ்கை முழுதும் வறுமைதான்.

ஒரு நாள் யாரோ ஒரு ரொட்டியையும் கொஞ்சம் வெண்ணையும் கொடுத்துட்டு போனாங்க. அதை சாப்பிட பக்கத்துல வெச்சுட்டு "விட்டலா! இன்னிக்கி சாப்பாடு அனுப்பிட்டாயா" ன்னு விட்டலனை நினைச்சு பஜன் செய்ய ஆரம்பிச்சார். அப்ப ஒரு நாய் வந்து ரொட்டியை கவ்விகிட்டு ஓட ஆரம்பிச்சது. பக்கத்துல இருந்த எல்லாரும் சத்தம் போட முழுச்சுகிட்டார் நாமதேவர். எல்லாரும் "பாரு பாரு ரொட்டியை நாய் கவ்விகிட்டு ஓடறது" ன்னாங்க. நாம தேவரும் அதன் பின்னாலேயே ஓட ஆரம்பிச்சார். நாய் இன்னும் வேகமா ஓடறது. நாமதேவர் "விட்டலா, விட்டலா, ரொட்டியை மட்டும் எடுத்துக்கிட்டு வெண்ணையை விட்டுட்டயே. ரொட்டியை அப்படியே சாப்பிட முடியாது. தொண்டை அடைக்கும்"ன்னு கத்திக்கிட்டே ஓடினார்.

சுத்தி இருந்தவங்க எல்லாரும் இது சரியான கிறுக்குன்னு நினைச்சாங்க.

இவருக்கு நிலையா வருமானம் ஏதும் கிடையாது. எப்படியோ நாலு காசு சேர்ந்தாலும் பாகவதர்களை கூப்பிட்டு பஜனை எல்லாம் நடத்தி சாப்பாடு போட்டு தீத்துடுவார்.
இவரோட போக்கு வெறுத்துப்போய் இவர் மனைவியே விட்டலன் கிட்டே போய் புகார் பண்ணி இருக்கா. "நீ இப்படி எம் புருஷனை போட்டு இழுக்கிறயே! பாரு, இந்த மனுஷன் ஒரு சல்லி காசு கூட வீட்டுக்கு கொண்டுவர மாட்டேங்கிறார். நான் எப்படி குடும்பம் நடத்தறது?" என்று கேட்டா. விட்டலனோ "நான் ஒன் புருஷனை இழுக்கலை. அவன்தான் என்னை இழுக்கறான். என்ன செய்யட்டும்?" ன்னார். இவளோ "அதெல்லாம் எனக்கு தெரியாது. காசு வரலைனா நாங்க பட்டினி கிடக்க வேண்டியதுதான்" அப்படினா. விட்டலன் "சரி, சரி, எங்கிட்டே ஏது காசு? நீ போய் ருக்குமாயியை பாரு." அப்படின்னான். இவளும் ருக்குமாயியை போய் பாத்து புகார் பண்ணா. "சரி, நான் கவனிக்கிறேன்" அப்படின்னு ருக்குமாயி சொன்னா. நாமதேவர் மனைவியும் திருப்தியா வீட்டுக்கு போனா.

அன்னிக்கு இரவு ஒரு வண்டியை ஓட்டிக்கிட்டு ஒரு ஆசாமியும் ஒரு பெண்ணும் நாமதேவர் வீட்டுக்கு வந்தாங்க. நாமதேவரோட குரு கொண்டு கொடுக்கச்சொன்னதா நிறைய மூட்டைகளை இறக்கி விட்டுவிட்டு போயிட்டாங்க. இறக்கின மூட்டையெல்லாம் பிரிச்சு பாத்தா நிறைய காசும் பொருளும் இருந்தது. இது ஏன் என் குரு இங்க அனுப்பினார்ன்னு கேட்டுக்கிட்டே கொண்டு வந்தவங்களை தேடினா அவங்களை காணோம். விட்டலனும் ருக்குமாயியும் எப்பவோ திரும்பி போயிட்டாங்க!

---

மதியம் ஞாயிறு, மே 11, 2008

கேள்வி

ம்ம்ம் கடந்த பதிவுகள் கடைசிலே கொஞ்சம் கனமா போச்சோ என்னவோ!

ஆமாமா! நீங்க பாட்டுக்கு இப்படி இப்படி இருக்கணும்னு பட்டியல் முழ நீளம் போட்டுக்கிட்டே போனா எப்படி? எதை கடை பிடிக்கணும்னு கொஞ்சம் சிம்ப்ளா சொல்லுங்க!

சரி ஆகட்டும். சிம்பிளாவே போகலாம்.
முதல்ல வரது பகவானோட கதைகளை கேக்கிறது.
முதல்ல இறைவனோட பெருமைகளை தெரிஞ்சுக்கணும். அப்புறம் அப்படி தெரிஞ்சுக்கிறதோட பயனை பத்தி தெரிஞ்சு, இறைவனை பத்தி மேலும் தெரிஞ்சு கொண்டு, யார் எப்படி பயன் பெற்றாங்களோ அவங்க வழியை தெரிஞ்சுக்கணும். நாமும் அவங்களோட உயர்ந்த நிலையை அடைய சாதனை செய்யனும். இதுக்கெல்லாம் முதல் படி பகவானை பத்தி தெரிஞ்சுகிறதுதானே? இதுதான் முத படி. கேள்வி. சிரவணம் என்கிறாங்க. கேக்க கேக்க அவனை பாக்கத்தோணும். மனசு ஒருமை படும். மத்த விஷயங்கள் மேல பற்று விலகும். இது அடுத்த படிகள்ல போக உதவும்.

அட, அட, இப்படி ஏதாவது சுலபமா சொல்லறதை விட்டுட்டு.. ம்ம்ம் மேலே சொல்லுங்க. கதை கேட்டாலே பக்தில முன்னேறி மோக்ஷம் கிடச்சுடும் இல்ல?

நக்கலா? அப்படி கதை கேட்டுதான் ஒத்தர் மோக்ஷத்துக்கு போனாரு!

அட நெசமாவா? அப்ப கதை சொல்லுங்க.

இதோ பிடிங்க!
பரிக்ஷித்து மகா ராஜா ஒரு நாள் பரிவாரங்களோட வேட்டையாடிகிட்டு இருந்தார். வேட்டை மும்முரத்துல எல்லாரும் பிரிஞ்சுட்டாங்க. பரிக்ஷித்துக்கு தாகம் எடுத்தது. தண்ணீர் தேடி போனார். அங்க சமீரகர் என்கிற முனிவர் தவம் செஞ்சுகிட்டு இருந்தார். அவரை தண்ணி கேட்டார். அவரோ தவம் கலையாம இருந்ததால பதில் சொல்லலை. கோபப்பட்டு பரீக்ஷித்து அங்கே பக்கத்தில கிடந்த ஒரு செத்த பாம்பை தூக்கி அவர் கழுத்துல மாலை மாதிரி போட்டுட்டு போயிட்டான்.
பிறகு சமீரகரோட பிள்ளை அங்க வந்தான். வயசு சின்னதானாலும் தபசு பெரிசு. அப்பா கழுத்தில செத்த பாம்பை பாத்தான். நடந்த விஷயம் ஞான திருஷ்டில தெரிஞ்சது. படு கோபம் வந்தது. "இவனென்லாம் ஒரு ராஜாவா? என் அப்பா கழுத்தில பாம்பை மாலையா போட்டவன் ஒரு வாரத்தில தக்ஷகன் பாம்பு கடிச்சு சாகட்டும்" ன்னு சாபம் கொடுத்துட்டான்.
சமீரகர் தவம் கலைஞ்சு எழுந்தப்ப தன் பையன் அழுதுக்கிட்டு இருக்கிறதை பாத்தார். ஏண்டா அழறேன்னு கேட்டார். பையனும் நடந்ததை சொன்னான். "என்ன காரியம்டா செஞ்சே? நானோ முனிவன். எனக்கு பாம்பை போட்டா என்ன மாலையை போட்டா என்ன? ரெண்டும் ஒண்ணுதான். இதுக்குப்போய் ராஜாவை சபிச்சுட்டயே! அவனால எத்தனை ஜனங்க சந்தோஷமா இருக்காங்க?” இப்படி கடிந்துகிட்டு ராஜா கிட்டே போய் விஷயத்தை சொல்லி இன்னும் ஏழு நாள்தான் உயிர் வாழ்வார் அப்பிடின்னும் சொல்லிட்டு வான்னார்.

இதை கேள்வி பட்ட ராஜா வருத்தப்பட்டான். இன்னும் ஒரு வாரம்தான் இருக்கா? அதுக்குள்ள நாம் எப்படி உருப்படலாம் னு யோசிச்சான். சரி வடக்கிருந்து உயிர் தியாகம் பண்ணலாம்னு கங்கை கரைக்கு போனான். பல ரிஷிகளும் வந்து சேந்தாங்க. அவங்களை வணங்கி தேற வழிய சொல்லுங்கன்னு கேட்டான். அவங்க சுகர் கொஞ்ச நேரத்துல இங்க வருவார். உனக்கு மோக்ஷம் கிடைக்க வழி அவரால தெரியும் னு சொல்லி ஆசிர்வாதம் செஞ்சுட்டு போயிட்டாங்க. அங்கே சுக பிரம்ம ரிஷியும் வந்து சேர்ந்தார். அவரை வணங்கி யோசனை கேக்க அவர் ஒரு வாரத்தில மோக்ஷம் கிடைக்கும் வழி பகவானை பத்தி கதை கேட்கிறதுதான் அப்படின்னு சொல்லி

பாகவதத்தை சொல்ல ஆரம்பிச்சார்.ஒன்பதாவது அத்தியாய கடைசில சுகர் கிருஷ்ணனோட பெருமைகளை சுருக்கமா சொன்னார். பரிக்ஷித்து "எனக்கு ரொம்பவே அதிருப்தியா இருக்கே. ஹரிசந்திரன், துஷ்யந்தன், சூரிய குல மன்னர்கள், சந்திர குல மன்னர்கள் கதை எல்லாம் கேட்டப்ப எப்ப கிருஷ்ணன் கதை வரும்னு காத்துக்கிட்டு இருந்தேன். என் உறவினர்கள் எல்லாரும் கிருஷ்ணன் பத்தி எவ்வளவு உயர்வா சொல்லி இருக்காங்க. அவன் கதையை கேக்கதான் நான் உயிர் பிழச்சு இருக்கேன் போல தோணுது. அதனால அவன் கதையை விரிவா சொல்லுங்க" ன்னு கேட்டான். ரொம்பவே சந்தோஷப்பட்ட சுகர் கிருஷ்ணன் கதையை விஸ்தாரமா சொல்ல (10 வது அத்தியாயம்) சிரத்தையோட கேட்ட பரிக்ஷித்து மோக்ஷம் அடைஞ்சான்.

---

மதியம் திங்கள், மே 12, 2008

ரிவிஷன்

-பக்தி யோகத்துல இறங்கறவங்க எப்படி இருக்கனும்?

என்கிற தலைப்பில முன்னேயே பட்டியல் போட்டு இருந்தோம். அனேகமா அது எல்லாத்தையும் கொஞ்சம் கொஞ்சமா பாத்துட்டோம். முன்னே பின்னே இருக்கு. இது அத எல்லாம் கொஞ்சம் நேர் செய்ய.

1. பயிற்சி: அசையாத மனசோட எப்போதும் தொடர்ச்சியாக கடவுளை நினைச்சுக்கிட்டே இருப்பது. அதெப்படி எப்பவுமே நினைக்க முடியும்ன்னா, முடியும். வழியை அப்புறமா பாக்கலாம். இங்கே இருக்கு.

2. விவேகம்: சரி தவறு என்கிற பாகுபாடு தெரியணும். அதில் சரியானதையே எப்பவும் தேர்ந்தெடுக்க முடியனும். இங்கே இங்கே இங்கே இருக்கு

3. விமோகம்: மோகம் நமக்கு தெரிஞ்சதுதானே. அது உலக விஷயங்கள்ல. மோகம் இல்லாம இருப்பதே விமோகம். அதாவது பற்றுக்களில் இருந்து விடுபடுதல். இங்கே இருக்கு

4. சத்தியம்: வாய்மை. ஆன்மீகத்தில எந்த வழியா போனாலும் கடை பிடிக்க வேண்டியது. உண்மையே நினைத்து உண்மையே பேசி மனச்சாட்சி சொல்கிறதை கேட்டு நடப்பது.

5. அர்ஜவம்: நேர்மை இங்கே இருக்கு

6. கிரியை: எல்லா சீவ ராசிகளுக்கு நல்லதே செய்வது. ஏன்னா எல்லா சீவராசிகளிடமும் கடவுள் இருக்கிறார் இல்லையா? இங்கே இருக்கு

7. கல்யாணம்: திருமணம் இல்லைங்க! இதுவும் சம்ஸ்கிருதத்திலிருந்து வந்து வேற விதமா பயன்படுகிற பல வார்த்தைங்கள்ல ஒன்னு! கல்யாணம் என்கிறது மற்றவர்களிடம் அன்பு பாராட்டி அவர்கள் நல்லா இருக்கணும்னு நினைக்கிறது. கடவுளிடம் வேண்டிக்கிறப்ப எல்லாரும் நல்லா இருக்கணும், உலகம் அமைதியா நல்லா இருக்கணும்னு வேண்டிக்கிறது.

8. தயை: கருணை. அன்பே சிவம். கடவுள் அன்பு, மன்னிக்கும் தன்மை, பரிவு கொண்டவன். அவனை புரிந்து கொள்ள , அடைய முயற்சி பண்ணுகிற நாமும் அவனை மாதிரி இருக்க பழக

வேண்டும். இங்கே இருக்கு

9. அஹிம்சை: மனதாலும் செயலாலும் மற்ற சீவ ராசிகளுக்கு துன்பம் விளைவிக்காம இருப்பது. இங்கே இருக்கு

10. தானம்: கஷ்டப்படுகிற ஏழை எளிய மக்களுக்கு முடிந்தவரை, சுத்தமான உள்ளத்தோட வாரி கொடுக்கிறது. இங்கே இருக்கு

11. அனவஸ்தை: அவஸ்தை தெரியுமில்லையா? கஷ்டப்படுகிறது. அனவஸ்தை எப்பவுமே சிரிச்சுகிட்டு நம்பிக்கையோட இருப்பது. இங்கே இருக்கு

இந்த பதினொரு விஷயமும் பக்தி வழில சீரியஸா ஈடுபடறவங்களுக்கு இருக்க வேண்டிய விஷயங்கள். நமக்கு இதெல்லாம் இல்லைன்னா வளர்த்துக்க வேண்டியது.

---

மதியம் செவ்வாய், மே 13, 2008

உள்ளுதல்

ஸ்மரணம் என்பது நினைக்கிறது, உள்ளுதல். பகவானைப்பத்தி கேட்டதையும் பாடினதையும் இடைவிடாம நினைக்கனும். அவனோட சிறப்பு, புகழ், அழகு, வீரம், அருள், கொடை இப்படி எல்லா குணங்களையும் சிந்திக்கணும். அப்படி நினைக்க நினைக்க அவன் சிறப்புகள்ல மனசு தோய தோய நம்ம மனசில இருக்கிற அழுக்கெல்லாம் போயிடும். தெளிவா ஆயிடுவோம்.

எதை இடைவிடாம நினைக்கிறோமோ அதுவாகவே ஆயிடுவோம் ன்னு பெரியவங்க சொல்லறாங்க. யார் காமத்தையும் ஆட்டம் போடறதையும் நினைக்கிறோமோ அவங்க அதுலேயே அழுந்தி மிருகமா போவாங்க. யார் பகவானைப்பத்தி அவனோட நல்ல குணங்களையே நினைக்கிறாங்களோ அவங்களுக்கு அந்த நல்ல குணங்கள் வந்து சேரும்.

திபெத்ல ஒரு துறவி இருந்தார். அவர்கிட்டே ஒரு இளைஞன் வந்து சேந்தான். உபதேசம் பண்ணனும்னு கேட்டுக்கிட்டான். "சரி, இங்கியே கொஞ்ச நாள் இரு. உனக்கு எது பொருத்தம்னு பாத்து செய்யறேன்" னு சொன்னார். பிறகு அவனை கவனிச்சதுல அவனுக்கு புத்தியும் அதிகமில்ல. உடம்பாலேயும் ஒண்ணும் பெரிசா செய்ய முடியாதுன்னு கண்டுபிடிச்சார். என்ன தத்துவம் சொன்னாலும் ஒண்ணும் புரியலை. என்னடா செய்யறதுன்னு யோசிச்சார். "அப்பனே, உனக்கு எதை ரொம்ப பிடிக்கும்?" ன்னு கேட்டார். "சாமி. நான் வளக்கிற யாக் எருமையைதான் ரொம்ப பிடிக்கும்" அப்படின்னான். "நல்லதுபா. நீ அதையே நினைச்சுகிட்டே இருக்க முடியுமா?" ன்னு கேட்டார்.
" ஓ செய்யலாமே."
"சரி, அப்படியே பண்ணு"

இத கேட்டுக்கிட்டு இருந்த மத்த சிஷ்யங்களுக்கு சிரிப்பு தாங்கல.
சில நாட்கள் போச்சு. இந்த சீடன் சாப்பாட்டுக்கு நாலு நாளா வரக்காணோம். சாதாரணமா சாதனைல இருக்கிறவங்கள யாரும் தொந்திரவு செய்ய மாட்டாங்க. அதனால தகவல் குருவுக்கு போச்சு. குரு சிஷ்யன் இருந்த இடத்துக்கு போனார்.
"அப்பனே, இருக்கியா?" ன்னு கூப்டார்.
" குருவே, இருக்கேன்" ன்னு குரல் வந்தது.
"வெளியே வரலியா ?"
"வர ஆசைதான் குருவே, பசிக்குது."
" பின்ன வாயேன்!"

---

" வாசல் சின்னது. கொம்பு இடிக்குது. வர முடிலை" ன்னான் சிஷ்யன்.
இந்த அளவு ஒன்றி போகாட்டாலும் ஸ்மரணம் அடித்தடுத்த நிலைகள்ல கொண்டு விடும்.

---

மதியம் வியாழன், மே 15, 2008

கீர்த்தனம்

அடுத்து கீர்த்தனம். திருநாமங்களையும் புகழையும் மனதார உருகி பாடுவதே கீர்த்தனம். பாடல் இனிமையா இருந்தா மத்தவங்களுக்கு நல்லது. :-))

இனிமையா இல்லேனாலும் பாடறவருக்கு நல்லது. மனசு ஈடுபட்டு உருகறதுதான் முக்கியம். பாடப்பாட உள்ளம் அந்த பகவான்கிட்டே மேலும் நெருங்கும். இப்படி பாடி பாடியே பக்தி வளர்ந்து உன்னத நிலைக்கு போனவங்க மீரா, ஆண்டாள், சூர்தாஸ், ஆழ்வார்கள், நாயன்மார்கள். உண்மையில் எந்த பக்தனுமே இந்த வழியை தள்ள முடியாது. பத்து பேர் சேர்ந்து பஜனை செய்கிற போது அவங்களுக்குள்ள ஒரு அன்யோன்யம் ஏற்பட்டு சத்சங்கம் ஏற்பட்டு பக்தி திடப்படும். இந்த நாம சங்கீர்த்தனத்தை முக்கியத்துவம் கொடுத்து பிரசாரம் செய்தவர் ஸ்ரீமத் போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.

ஹரி சங்கீர்தனஸ்யாஸ்ய நோபதேச: கதஞ்சன

என்று ஹரி சங்கீர்த்தனத்துக்கு ஒரு உபதேசமும் வேண்டாம்; அதை விட உயர்ந்தது இல்லை என்கிறது பிரம்மாண்ட புராணம்.

மகாபாரத யுத்தம் முடிந்தது. தர்ம புத்திரர் கிருஷ்ணனை பாத்து இப்ப என்ன செய்யனும்னு கேட்டார். கிருஷ்ணன் "பீஷ்மர் அம்பு படுக்கைல இருக்கார். அவரப்போல தர்மத்தை தெரிந்தவங்க ரொம்ப குறைவு. நீ போய் அவர்கிட்ட உபதேசம் கேளு." ன்னு சொன்னான். தர்மரும் போனார். பல விஷயங்கள் உபதேசம் ஆச்சு. எல்லாத்தையும் கேட்டுவிட்டு தர்மர் கேட்டார்:

"கோதர்ம: ஸர்வ தர்மாணாம் பரம பவத: மத:?

" [எந்த தர்மம் எல்லாவற்றிலும் உயர்ந்ததாக கருதப்படுகிறது?]
அதுக்கு பீஷ்மர் சொன்னார்:

"ஏஷ மே ஸர்வ தர்மாணாம் தர்மோதிகதமோ மத:
யத் பக்த்யா புண்டரீகாக்ஷம் ஸ்தவைர் அர்சேத் நரஸ்ஸதா"

எல்லா தர்மங்களிலும் சொல்லப்படப்போகிற தர்மம் மிக உயர்வாக கருதப்படுகிறது. யார் பக்தியுடன் ஹ்ருதய கமலத்தில் பிரகாசிக்கிற வாசுதேவனை குண கீர்த்தன ரூபமான ஸ்துதிகளால் எப்போதும் அர்ச்சனை செய்கிறானோ அதுவே பரம தர்மம் ஆகும்.

அப்படி ஏன் இதுக்கு அவ்வளவு உயர்வு?

இதானால் ஹிம்ஸை கிடையாதாம். (கேட்கிறவங்களை பொறுத்து இருக்கு! ;-)) ஒரு பூவையும் பறிக்க வேண்டாம். காய், கனி எல்லாம் பறித்து நிவேதனம் செய்ய வேண்டாம்.
இதுக்காக எந்த பொருளையும் சேகரிக்க வேண்டியதில்லை.
ஆண், பெண், குழந்தை இப்படி யார் வேண்டுமானாலும் சொல்லலாம். மற்ற விஷயங்களை போல ஒரு க்வாலிபிகேஷனும் வேண்டாம். ஜாதி தடை இல்லை. இங்கேதான் சொல்லலாம், அங்கேதான் சொல்லலாம்னு ஒரு கட்டுப்பாடும் கிடையாது. காலைதான், இரவுதான் என்று நேர

கட்டுப்பாடும் கிடையாது.
இந்த நியமத்தில சொல்லணும் என்று கட்டுப்பாடும் இல்லை.

ஆனால் நாமகீர்த்தனம் தனக்கு அபராதம் செய்தவனை நரகத்தில் தள்ளிவிடுமாம்.
அது என்னடா அபராதம் என்றால் பெரிசா 10 பாய்ண்ட் லிஸ்ட் போடராங்க! சாது நிந்தை, சிவ நாம விஷ்ணுநாமங்களிடையே வித்தியாசம் பார்க்கிறது, நாம பலம்தான் இருக்கே என்று செய்யக்கூடாததா சொன்ன கர்மாக்களை செய்கிறது இப்படி பத்து.

நாம சங்கீர்த்தனம் என்று பெரிசா கூட வேண்டாம். ஒரு முறை பகவான் நாமத்தை சொன்னாலே மோட்சம் கிட்டும்ன்னு சொல்லி அஜாமிளன் கதையை சொல்றாங்க. அஜாமிளன் இல்லாத அந்நியாயம் எல்லாம் பண்ணவன். சாகிற சமயத்தில் கடைசி வார்த்தையா அவன் பிள்ளையை கூப்பிட "நாராயணா" என்று சொன்னான். செத்தவனை கொண்டு போக யமதூதர்கள் வந்தாங்க. அப்போ விஷ்ணு தூதர்கள் வந்து "இவன் எங்களோடவன். தன்வசம் இல்லாமலே மோக்ஷத்துக்கு சாதனமான நாராயணா என்கிற சொல்லை சொன்னான் இல்லையா" ன்னு சொல்லி கொண்டு போயிட்டாங்க.

அப்ப பகவான் பெயரை ஒரு தரம் சொன்னா போதும் இல்லையா? இல்லை, எப்பவுமே சொல்லிகிட்டு இருக்கணும்.

ராம கிருஷ்ணர் கிட்டே ஒத்தர் கேள்வி கேட்டார். கங்கை கரையிலேயே இவ்வளோ பேர் இருக்காங்க. தினமும் கங்கைல குளிக்கிறாங்க. இவங்க பாபம் எல்லாம் போயிருக்கணுமே? ஆனா அப்படி ஒண்ணும் வித்தியாசம் தெரியலையே?

ராம கிருஷ்ணர் வேடிக்கையா சொன்னார்.

"இவங்க குளிக்கப்போற போதே கங்கை நதிலேந்து திவலைகள் பட்டு பாவம் எல்லாம் விலகும். அது எங்க போகும்? இங்கேயே இருக்கிற மரம் செடி கொடிகள்ளே இருக்கும். குளிச்சுட்டு திரும்பி வரப்போ எப்ப இங்க இருக்கிற கடைகளிலே இருக்கிற வஸ்துக்கள் மேலே மனசு போக ஆரம்பிக்குமோ அப்ப அவனோட பாவங்கள் எல்லாம் திருப்பி அவனை பிடிச்சுக்கும்!"

---

மதியம் வெள்ளி, மே 16, 2008

பாதசேவனம்

இறைவனோட திருவடிகளுக்கு எப்பவுமே ஒரு சிறப்பான இடம் பக்தி வழில உண்டு. சாதாரணமா நாம துச்சமா மதிக்கிறது பாதங்களைதானே. நடக்கிறோம், கொள்ளறோம், பாதங்கள்லதான் அழுக்கு படுகிறது. வெளியே போய் வந்தா கால்களைதான் கழுவிக்கிறோம். அப்படி சாதாரணமா அசுத்தமா நினைக்கிற பாதம் இறைவவனோடது என்கிறப்ப நாம அதை புனிதமா நினைக்கிறோம். எப்படி பெரியவங்க கால்களை தொட்டு கும்பிடறோமோ அப்படி பகவானோட பாதங்களை தலைல தாங்கவும் பக்தர்கள் தயங்க மாட்டாங்க. அதனாலதான் பெருமாள் கோவில்ல சடாரி சாத்துகிறாங்க. கிரீடம் மாதிரி இருக்கிற அது மேலே பாதங்கள் பொறிச்சு இருக்கும்.

இந்த பாதுகைகளின் பெருமையை பாடி பாடி பரமனோட பாதங்கள்ல தன்ன முழுக்க அர்பணிச்ச வேதாந்த தேசிகர் பாதுகா சஹஸ்ரம்னு புத்தகமே எழுதினார்.

ராமரோட பாதுகைகளைதான் பரதரும் கேட்டு வாங்கிப்போனார். ராமரோட பாதம் பட்டுதான் அகலிகையும் சாபம் நீங்கினாள். இத பாத்து விஸ்வாமித்திரர்,

> மை வண்ணத்து அரக்கி போரில்
> மழை வண்ணத்து அண்ணலே உன்
> கை வண்ணம் அங்கு கண்டேன்

கால் வண்ணம் இங்கு கண்டேன்

அப்படின்னு ஆச்சரியப்பட்டாராம்.

அப்பப்ப நடக்கிற தேவ அசுர யுத்தம் நடந்து மகாபலி தலைமைல அசுரர்கள் ஜெயிச்சுட்டாங்க. தேவர்களோட அம்மா அதிதி சும்மா இருப்பாளா? பயோ விரதம்னு ஒரு விரதம் இருந்து விஷ்ணுகிட்டே வரம் வாங்கினா.
பெருமாளும் ஒரு குள்ளமான பிரம்மசாரியா வாமனரா வடிவெடுத்து பலிகிட்ட வந்தார். பலியும் வரவேத்து "உங்களுக்கு என்ன வேணும்?" ன்னு கேட்டான்.
"ஒண்ணும் வேணாம், என் காலால மூணு அடி மண் போதும்"ன்னார் விஷ்ணு.
"அட! நான் இந்த மூணு உலகத்துக்குமே ராஜா. வெறும் மூணு அடி மண்தானா வேணும்?"ன்னான் பலி. அது போதும்னுட்டார் வாமனர்.

அசுர குருவான சுக்கிராசாரியாருக்கு இது தெரிஞ்சு போச்சு. பலிகிட்ட " இவன் கேக்கிறானேன்னு கொடுக்காதப்பா. அது உனக்கே கெடுதியா முடியும்" ன்னார்.

இந்த சின்ன பையன் என்ன பண்ண முடியும்?

அப்பனே வந்து இருக்கிறது சாதாரண ஆசாமி இல்ல. விஷ்ணு. அவர் எப்பவும் சுரர்களுக்குதானே சாதகம் பண்ணுவார். அதனால சொல்லறேன். வேண்டாம்.

பலி சக்ரவர்த்தி கேக்கலை.
விஷ்ணுவே வந்து கேட்டா நான் என்ன பாக்கியம் பண்ணி இருக்கணும்? அப்படி பாத்தாலும் அது தப்பில்லே.

தண்ணீர் இருக்கிற கமண்டலுவை தூக்கிவிட்டான் பலி.
சுக்கிராசாரியாருக்கு பொறுக்கலை. இவன் ராஜ்யத்தை விஸ்தாரம் பண்ன நான் எவ்வளோ கஷ்ட பட்டு இருப்பேன்? அதை எல்லாம் ஒடு நிமிஷத்துல தொலச்சுடுவான் போல இருக்கேன்னு நினச்சு ஒரு வண்டு ரூபம் எடுத்து போய் கமண்டலு மூக்கில உக்காந்து அத அடைச்சுட்டார்.

வாமனர் சிரிச்சுகிட்டே ஒரு தர்ப்பையை எடுத்து கமண்டலு மூக்கில குத்தினார்.
சுக்கிராசாரியாரோட ஒரு கண்ணு போச்சு.
பிறகு பலி தாரை வார்த்து தர வாமனரும் வாங்கிகிட்டார். "சரி, உன் மூணு அடியை அளந்து எடுத்துக்க"ன்னு பலி சொன்ன உடனே வாமனர் வளர ஆரம்பிச்சார். ஒரு அடியால மண்ணையெல்லாம் அளந்தார். இரண்டாவது அடியால விண்ணையெல்லாம் அளந்தார்.
"மூணாவது அடியை எங்கே வைக்கட்டும்?" ன்னு பலியை பாத்து கேட்டார்!

"ஸ்வாமி! என் தலை மட்டுமே பாக்கி! அதில வைங்க" ன்னு பலி சொன்னான்.
பகவானும் சிரிச்சுகிட்டே அவன் தலை மேல தன் காலை வைத்து அப்படியே அழுத்தி சுதல லோகத்துக்கு கொண்டு போயிட்டார். அங்கே அவனை ராஜாவாக்கினார். எல்லா மங்களங்களையும் கொடுத்தார்.
அப்படி திருவடி தீட்சை வாங்கினவன் பலி சக்ரவர்த்தி.

எவனுக்கு நான் அருள் பண்ண நினைக்கிறேனோ அவனோட பொருளை எல்லாம் நான் போக்கிவிடுகிறேன். பொருள் இருக்கு என்கிற செருக்கால இல்லையா மனுஷன் கர்வத்தோட உலகத்தையும் என்னையும் அவமதிக்கிறான்?

அப்படின்னு பாகவதத்திலே பகவான் சொல்கிறதா இருக்கு.

அது போல பலியோட சொத்தையெல்லாம் தன்னோடதாக்கி அவன் பணித்தபிறகு அவனுக்கு அவன் அகங்காரத்தையும் அழிச்சு அவனை ரக்ஷிச்சார் பெருமாள்.

---

மதியம் செவ்வாய், மே 20, 2008

அர்ச்சனம் வந்தனம்

பகவானைப்பத்தி ய பெருமைகள கேட்டு அவனையே நினைச்சு அவன் பெருமைகளை பாடிய பக்தன் அடுத்த என்ன செய்ய நினைக்கனும்? பகவானுக்கு அர்ச்சனை செய்ய நினைக்கிறானாம். பகவானோட பாதங்கள சுத்த நீராலே கழுவி மலர்கள் இட்டு பூசிக்கிறான். எல்லாவற்றிலும் புனிதமானது பகவான் திருவடிகள்ன்னு நினைக்கிற பக்தன் பூஜை பண்ண பண்ண தான் தன் உடல் என்கிற நினைப்பு ஒழிகிறதாம். தன்னை முழுக்க முழுக்க அவன்கிட்டே ஒப்படைக்க தயாராகிறான். இததான் அர்ச்சனம் என்கிறாங்க.

வந்தனம்
அர்ச்சனம் என்கிற செய்கை வரை வந்தவர்களுக்கு அப்பறமா ஒண்ணுமே செய்ய வேண்டாமே சிவனேன்னு அவன் கால்கள்ளேயே விழுந்து கிடக்கலாமேன்னு தோணும்.
இப்படி செய்யறதே வந்தனம். அப்படி செய்கிறப்ப தான் என்கிற நினைப்பு அழிக்கப்படுது. தான் பெரிய ஆள் என்ற நினைப்பு போய் பணிவு வரும்.

கம்ஸன் கிருஷ்ணன் இருக்கிற இடத்தை தெரிஞ்சதும் அவனையும் பல ராமனையும் மதுராவுக்கு அழைச்சு வரச்சொல்லி அக்ரூரர் என்கிறவரை அனுப்பினான். அக்ரூரர் வசுதேவரோட தாயாதி. அவரும் போய் அழைச்சதும் கண்ணன் உடனே கிளம்பிட்டான். வந்ததோட முக்கிய காரியம் முடியணுமே. இன்னும் மத்த பல காரியங்கள் இருக்கே. வரவழில ஒரு சாயங்காலம் யமுனை ஆறில மாலை அனுஷ்டானம் செய்ய இறங்கினார் அக்ரூரர். அப்படியே திகைச்சு போயிட்டார். கரை பக்கம் திரும்பி பாக்கிறார். கிருஷ்ணனும் பலராமனும் ஜபம் செய்யராங்க. தண்ணிக்குள்ளே பாத்தா அங்க சிரிச்சுகிட்டே இருக்காங்க. அக்ருரருக்கு கொஞ்ச நேரம் ஒண்ணும் புரியலை. இங்கேயும் அங்கேயும் திருப்பி திருப்பி பாத்துட்டு இரண்டு பேரும் சாதாரண ஆசாமிங்க இல்ல பகவான் அவதாரம்தான் அப்படின்னு புரிஞ்சுகிட்டார். புரிய ஆரம்பிச்சதும் எல்லா இடத்திலேயும் கண்ணனே தென்பட்டானாம். அக்ருரரும் அவனை பாக்கிற இடமெல்லாம் விழுந்து விழுந்து வந்தனம் பண்ணார். இப்படி செய்தே அவரோட மனசு பகவான்ல லயிச்சு ஸ்திரப்பட்டதாம்.

---

மதியம் புதன், மே 21, 2008

பக்தி பற்றி தியாக பிரமம்

உண்மையா பக்தி செய்கிறவங்க எப்படி இருப்பாங்கன்னு பாத்திருக்கோம். அதுக்கு இலக்கணமா வாழ்தவர் தியாக பிரமம் என்கிற தியாக ராஜர். அவர் என்ன சொல்கிறார்ன்னு பாக்கலாமா?

ராகம் பியாகடை

தாளம் ஆதி

பல்லவி

பக்துனி சாரித்ரமு வினவே
மனஸா ஸீதா ராம

அனு பல்லவி

ஆஸக்தி கேல தாருகோசுஜீ
வன்முக்துடை யாநந்தமு நொந்து

---

சரணங்கள்

ஜபதபமுலுதா ஜேசிதி நநராது அதிகாகமரி
கபடாத் முடு மநமை பல்கராது
உபமதநகு லேகயுண்ட வலெ நநி
ஊரயூர திருக கராது
சபல சித்துடை யாலுஸு துலபை
ஸாரெகு ப்ரம காராத நேஹரி - (பக்)

பவ விப வமுநிஜ மநியெம்ச கராது அதிகாகமரி
சிவ மாதவ பேத முசேயக ராது
புவநமந்து தாநே யோக் யுட நநி
பொம்கி பொட்ட ஸாக ராது
பவநாத் மஜத்ருதமௌ ஸீதாபதி
பாத முலுயே மரராதநு ஹரி - (பக்)

ராஜஸ தாமஸ குணமுலு காராது அதிகாகநுசு
வ்யாஜ முநநு ராலேத நகாராது
ராஜயோக மார்கமுநீ சித்தமு
ராஜுஸி சுட விட வகராது
ராஜசிகா மணியை நத்யாக
ராஜ ஸகுநி மரவராத நேஹரி - (பக்)

ஸீதாராம பக்தனுடைய (வாழக்கை குறிப்பு) சரித்திரம் (பக்தனுடைய இயல்பு குணம்) இவற்றை மனமே கேள்.
தன்னால் இயன்ற வரை தருமங்களை செய்து அல்லது தனக்கு கிடைத்ததை கொண்டு திருப்தி அடைந்து ஒரு ஜீவன் முக்தனுடைய நிறைவுள்ள ஆனந்தத்தை அடைகிறான்.

ஜபம் தபம் இவற்றை தாம் முறையே செய்தும் அவைகளை மற்றவர் அறிய வெளியே சொல்ல மாட்டான். மனதில் கபடம் ஏதும் இல்லாமல் இருப்பான். தனக்கு நிகர் யாருமில்லை என ஊர் ஊராக சொல்லித்திரிய மாட்டான். அற்ப ஆசை கொண்ட மனதுடன் வீடு பொருள் இவற்றில் பற்று வைக்க மாட்டான். இவ்வுலகில் அடைபவைகளை உண்மை என்று நம்பி இருக்க மாட்டான். அதுவுமில்லாமல்
சிவன் விஷ்ணு என்று பேதம் செய்ய மாட்டான். இந்த புவனத்தில் நான் ஒருவனே யோக்யன் என்று பெருமை பேசி காலம் கழிக்க மாட்டான். ஆஞ்சநேயன் பற்றும் திருவடிகளை உடைய சீதாபதியின் பாதாரவிந்தங்களில் பக்தி மறக்க மாட்டான். ராஜஸ தாமஸ குணங்களை அடையாது எல்லாம் கர்ம வசப்படியே வரும் என்று ராஜ யோக மார்கத்தை சித்தத்தில் நிலை பெற வைத்து ராஜ சிகாமணியான திருவாரூர் தியாகேசப்பெருமான் தோழராய் விளங்கும் ராமனை மறவாமல் இருப்பான்.

சமீபத்தில் ஸ்ரீ ஜீவாவிடம் ஆன்மீக பாடல்கள் பற்றி கேட்டு இருந்தேன். விரும்பியதை கொடுப்பவன் அல்லவா எம் பெருமான்? சமீபத்தில் கிடைத்த ஒரு புத்தக தொகுப்பை எடுத்தேன். முழுக்க முழுக்க தியாகராஜர் பாடல்கள்! இந்த பதிவில் எழுதி இருப்பது அதிலிருந்து எடுத்ததே. தொகுப்பு "வைதிக தர்ம வர்தினி" என்ற புத்தகத்தில் இருந்து தியாகோபனிஷத் என்ற பகுதி | எழுதியவர் டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.
நீங்கள் கேட்கும் பாடலுக்கு தொடுப்பு கொடுத்தது ஸ்ரீ ஜீவா அவர்கள். இந்த பதிவு அவருக்கு சமர்ப்பணம்!

---

மதியம் வியாழன், மே 22, 2008

வாழ்கை முறை

மொக்கை மொக்கை ன்னு கேள்வி பட்டு இருக்கீங்க இல்லை? என்ன எழுதறதுன்னு

---

தெரியாதப்ப அப்படி ஏதோ ஒண்ணை எழுதிடுவாங்க.
இது அப்படி ஒண்ணு! எழுத நினைச்சது இன்னும் தயாராகலே.
இந்த பதிவுல கூட மொக்கை போட முடியுமான்னு சந்தேகப்படறவங்க என் திறமையை குறைவா மதிப்பு போட்டு இருக்கீங்க!

:-))

இப்ப என்னுடைய -அப்படின்னா நான் கடை பிடிக்கிற தத்துவம் பத்தி சொல்லப்போறேன்! இதுக்கெல்லாம் பேர்ன்னு வைக்கலை. ஆனா சிலர் நாராயணனிஸம் ன்னு பேர் வெச்சிருக்காங்க.

இறந்த காலத்துல வாழ்வதையும் எதிர்காலத்துல வாழ்வதையும் கூடிய வரை தவிர்கிறேன்! அதாவது இறந்த கால நினைவுகள்ள ஏதாவது பாடம் இருந்தா அத எடுத்துகிட்டு மீதியை உதாசீனம் செய்யறேன். மறக்கறேன்னு சொல்லலை. எதையாவது மறக்கனும்னு நினச்சா அது கொஞ்சம் கஷ்டம்தானே. கருங்குரங்கு கதையாயிடும். உதாசீனம் செய்யறது மறந்து போகும்.

எதிர்காலத்தில என்ன செய்யனும்னு கொஞ்சம் திட்டம் போட்டாலும் அதை பத்தி கவலை படுகிறதில்லை! அதாவது ஒரு செஸ் ஆட்டக்காரர் மாதிரி ரொம்ப விரிவா திட்டம் போடறதில்லை. நாளைக்கே நாம் இருப்போமோ இல்லையோ. அதுக்குன்னு திட்டம் போடாம இருக்கிறதும் இல்லை. எதா இருந்தாலும் பகவான் நினைக்கிறபடி நடக்கட்டும்னு விட்டுவேன். நேரம் வரும் போது பகவான் எப்படி நடக்கனுமோ அப்படி நடத்துவான்கிறதுல நல்ல நம்பிக்கை இருக்கு. அப்படி நடக்கிறப்போ நாம நினைக்கிறதை விட நல்லாவே நடக்குது. இது அனுபவம்.

இப்ப இருக்கிற இந்த கணம்தான் நம்மது. அதனாத இந்த கணத்தில எனக்கு வாய்கிற வேலையை செஞ்சுகிட்டு போறேன். அத என்னால முடிஞ்ச அளவு நல்லா செய்யறேன். பிரச்சினையே இல்லாம வேலை நடந்து முடியுதா சந்தோஷம். பிரச்சினை வருதா அதை சரி செய்ய பாக்கிறோம். அது இன்னொரு வேலை. இப்படியே வாழ்கை ஓடுது.

நண்பர் ஒருவர்! நல்லா படிக்கிற மாணவர்தான். மருத்துவ கல்லூரி சேர்ந்தார். படிச்சு தேர்ந்து மேல் படிப்பு சேர்ந்தார். கடைசி பரீட்சைல நேர்முக பரீட்சை. ஒரு எக்ஸாமினர் கேள்வி எல்லாம் கேட்டு சரி போன்னார். அடுத்த எக்ஸாமினர் கேட்டது ஒரே கேள்விதான். நீ இன்ன மாவட்டத்து இன்ன ஜாதிதானே? ஆமாம்னு சொன்னதும் சரி போய் வான்னுட்டார். பரீட்சையில் தேறவில்லை ன்னு சொல்லிட்டாங்க. சரின்னு ஒரு வேலைல சேர்ந்து அப்படியே படிச்சு திருப்பியும் நேர்முக தேர்வு போனார். அதே எக்ஸாமினர். அதே கதை. சரின்னு ஊருக்கு வந்து ப்ராக்டிஸ் ஆரம்பிச்சார். ஆரம்ப காலம் நிறைய நேரம் கிடைச்சது. வாரம் தோறும் நகரத்துக்கு போய் அப்பதான் ஆரம்பிச்சு இருந்த ஒரு உடல் பரிசோதனை செய்யறதை கத்துக்கிட்டார். அடுத்து வந்த பரீட்சையில் வேற எக்ஸாமினர் வர பாஸ் பண்ணிட்டார்.

மேலெழுந்தவாரியா பாத்தா ரொம்பவே அந்நியாயம் நடந்ததுன்னு தோனுது இல்ல? அப்புறம் நடந்தது என்னன்னு பாக்கலாம்!

கொஞ்சம் கொஞ்சமா நோயாளிங்க வர ஆரம்பிச்சாங்க! ஆபரேஷன் செய்யறதுல முதல் பரீட்சையில் தேறாம இருந்தப்ப வேலை செஞ்சரே அந்த ஆஸ்பத்திரி அனுபம் ரொம்பவே கை கொடுத்தது. நல்ல ரிசல்ட் கிடைக்கவே நிறைய பேஷண்ட் வர ஆரம்பிச்சாங்க. அப்புறம் அப்பதான் ஆரம்பிச்சு இருந்த ஒரு உடல் பரிசோதனை செய்யறதை கத்துக்கிட்டார்ன்னு சொன்னேன் இல்லையா அந்த பரிசோதனை இந்த ஊர்ல யாரும் செய்யாம இருந்தப்ப இவர் செய்ய ஆரம்பிச்சதுல நிறைய வேலை வந்தது. இப்படி கொஞ்ச நாள்ளேயே பிஸி மருத்துவர் ஆயிட்டார்.

ஆக நாம் நினைக்கிற மாதிரி எல்லாம் நடக்கிறதில்லை! சில சமயம் கெட்டதுன்னு

நினைக்கறது கூட நாளான பின்னால நல்லதுன்னு தெரிய வரும். அதனால கடவுள் என்ன கொடுத்தாலும் நல்லதேன்னு எடுத்துக்க ஆரம்பிக்கலாம்.

இதை பிரஸாத புத்திங்கிறாங்க. இது கிடைச்சாச்சுன்னா வாழ்கை ரொம்பவே சுலபமாயிடும்.

---

மதியம் வெள்ளி, மே 23, 2008

நட்பு

சக்யம் என்கிற நட்பு

இறைவனோட உறவு கொண்டாடறவங்கள்ல அந்த உறவு பலவிதமாயும் இருக்கும். பலரும் இறைவனை தன் தலைவனா கொண்டாடினாலும் சிலர் வேற வித உறவு வச்சிருக்காங்க.

கிருஷ்ணனோட அர்சுனன் வச்சிருந்த உறவு நட்பு. அர்சுனனுக்காக எத்தனையோ செஞ்சார் கிருஷ்ணன். அவரோட தங்கை சுபத்தராவை திருமணம் செஞ்சுக்க அர்சுனன் விருப்பப்பட்டப்ப எப்படி சாதிச்சுக்கிறதுன்னு யோசனை சொன்னதே கிருஷ்ணன்தான். கீதை உபதேசம் செய்கிற போது விஸ்வரூப தர்சனம் காட்டுகிற வரை இப்படிதான் உறவு இருந்தது. அப்பறமாதான் "உன்னையே சரணடைஞ்சுட்டேன். என்ன சொன்னாலும் கேட்டுக்கிறேன்" என்கிற பாவத்துக்கு அர்சுனன் வந்தான்.

சுந்தரர் சிவபெருமானுடன் விசித்திரமாக உறவு கொண்டவர். எல்லாரும் உருகி பணியும் போது இவர் மட்டும் அதிகாரம் பண்ணுவார். வேலை வாங்குவார்.

சுந்தரருக்கு பரவை நாச்சியார் என்று ஒரு பெண் மனைவி. நன்றாக குடும்பம் நடத்தி வந்தவர் திருவொற்றியூர் சென்ற போது சங்கிலி நாச்சியார் என்பவரை சந்தித்து அவருடன் பழக்கம் ஏற்பட்டு அவரை மணந்து கொண்டு விட்டார். (ஏன் என்பது வேறு கதை) ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்தானே. அடடா பரவையை விட்டுவிட்டு வந்துட்டோமேன்னு வருத்தமாயிடிச்சு. தியாகேசரோ வஸந்த உத்ஸவம் வரதை நினைவு படுத்தி கொண்டு இருந்தார். திருவாரூர் போகாமல், தியாகேசரை பாக்காமல் இருக்க முடியலை. சரின்னு கிளம்பிட்டார். பல நிகழ்ச்சிகளுக்கு பிறகு அங்கே போய் சேர்ந்தார்.

திரும்பி அங்கே போனால் பரவை கதவை சாத்திட்டாங்க. "நீ எப்ப என்ன விட்டுவிட்டு போனயோ அப்பவே தொடர்பு விட்டு போச்சு. அங்கயே போன்" னு திட்டினாங்க. என்ன சமாதானம் சொல்லியும் எடுபடலை. என்ன பண்ணறது? சிவனேன்னு திரும்பினவர் என்னடா செய்யலாம்னு யோசிச்சார். நாம நம்ம கூட டூ விட்டவங்கள எப்படி சமாதானப்படுத்துவோம்? கொஞ்சம் விவரமான பிரெண்டை தூது அனுப்புவோம். அப்படிதான் சுந்தரர் தூது அனுப்ப நினச்சார். யாரை அனுப்பலாம்ன்னு யோசிச்சார். சில பெரியவங்களை அனுப்பினார். வேலைக்கு ஆகலை. பரவையார் "அவர் எனக்கு பண்ணின அபராதம் சின்னதில்லை. போய் வாங்க" ன்னு திருப்பிட்டாங்க.

பிறகு சிவபெருமான்தான் சரியான நபர்ன்னு தோணிச்சு. நேரா அவர்கிட்ட போய் "உனக்குதான் என் பிரச்சினை தெரியுமே. நீதான் தீத்து வக்கணும்" ன்னு கேட்டார். "என்ன பண்ணணும்?" னு சிவபெருமான் கேக்க "நீ போய் பரவைகிட்டே பேசி என்னை ஏத்துக்கச்சொல்லு" ன்னார். சிவபெருமானும் ஒரு ஆலய அர்ச்சகரா உரு மாறி பரவைகிட்டே போனார். பரவை அவரை மரியாதையோட வரவேத்தாங்க. உபசாரம் எல்லாம் பண்ணி "அகாலத்துல வந்து இருக்கீங்களே! என்ன வேணும்?" னு கேட்டாங்க. "அம்மா நீ சுந்தரத்தோட மனஸ்தாப பட்டு விலக்கி வச்சு இருக்கிறதா கேள்வி பட்டேன். அவன் ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்துல அப்படி பண்ணிட்டான். இப்ப உன் நினைவாவே துடிக்கிறான். அவனை திருப்பி ஏத்துக்கணும்" ன்னு சொன்னார். பரவை "அத விடுங்க. அது முடிஞ்சு போன சமாசாரம். வேற ஏதாவது வேணுமானா கேளுங்க" ன்னா. "இல்ல அம்மா, நீ தயவு பண்ணி..." ன்னு ஆரம்பிச்சார் சிவன். "இத பாருங்க நீங்க அதயே

பேசிகிட்டு இருந்தா மரியாத கெட்டுடும். வேற ஏதாவதுன்னா சொல்லுங்க. இல்லாட்டா....” ன்னு சொல்ல சிவபெருமான் மேல பேசாம திரும்பிட்டார்.

நடந்ததை கேட்ட சுந்தரர் சண்ட போட்டார். "ஏன் நான் அவளோட சேர்ந்து வாழணும்ன்னு உனக்கு விருப்பமில்லையா? நீ தூது போற லட்சணம் இதானா? சேத்து வக்கிற வழிய பாரு. நீ வேற யார் வேஷமோ போட்டுகிட்டு போனா என்ன அர்த்தம்?” ன்னு பிடிபிடின்னு பிடிச்சுட்டார். சிவ பெருமானும் "சரிப்பா நான் திருப்பியும் போறேன்" னார். தன் சுய ரூபத்தில யோகியர், முனிவர்கள் சூழ போய பரவையார் வீட்டு கதவ தட்டினார். பரவை நாச்சியார் ஏற்கெனவே அவரை திருப்பி அனுப்பிட்டாலும் "வந்தவர் சாதாரணமா தோணலையே? அவர் முகத்தில அப்படிஒரு ஒளி! மங்கல ஓசைகள் , வேத சப்தங்கள் கூட கேட்டா மாதிரி இருக்கே. இன்னும் ஒரு அபூர்வ வாசனை வீசுதே! வந்தவர் இறைவனேதானோ!” ன்னு யோசிச்சுகிட்டே இருந்தாங்க. இப்ப சிவபெருமான் கதவை தட்டவும் கதவ திறந்த பரவை அப்படியே திகைச்சு போனார். சுந்தரர ஏத்துக்கணும்ன்னு இப்ப சொன்னத அப்படியே ஏத்துக்கிட்டார்.

அடியாருக்காக ஆண்டவன் என்னவெல்லாம் செய்ய தயாரா இருக்கிறான்!

---

மதியம் செவ்வாய், மே 27, 2008

தாஸ்யம்

விறண்மிண்டர் ன்னு ஒரு தொண்டர். மலை நாட்டு வேளாள குடியில் பிறந்தவர். சிறு வயதிலேந்து சிவ பக்தர். எப்பவும் இறைவன் திரு நாமங்களை சொல்லிகிட்டு இருப்பார். இவருக்கு சிவனடியர்கள்கிட்டே ரொம்ப பக்தி. அவங்களை உபசரித்து தொழுவார். சிவனாருக்கு தன்னை வழி படறவங்களை விட தம் அடியார்களை வழி படறவங்க மேல அதிக பிரியம் வச்சு இருக்கார்ன்னு விறண்மிண்டருக்கு தெரியும். அதனால அடியார்களை பாத்தா அவர்களுக்கு வணக்கம் செலுத்திட்டுதான் அப்புறமா ஆண்டவனை வழி பட போவார்.

இவர் ஸ்தல யாத்திரையா போகிற போதுதான் ஆரூர் போனார். அடியார்களை வணங்கிட்டு உள்ளே போய் இறைவனை வணங்கினார். அப்புறமா வெளியே மத்தவங்ககிட்ட பேசிகிட்டு இருக்கிறப்ப சுந்தரர் அங்கே வந்தார். அவரை பாத்த எல்லா சிவனடியார்களும் அவரை வணங்க எழுந்தாங்க . விறண்மிண்டருக்கு ஆச்சரியம். யாரப்பா இது. எல்லாரும் எழுந்து வணங்கறாங்க ன்னு கேட்டார். சுந்தரரை பத்தி அவங்களும் சொன்னாங்க.

மக்கள் சுந்தரரை வணங்க, சிவ சிந்தனையிலேயே இருந்த சுந்தரர் யாரையும் கவனிக்கவே இல்லை. நேரா கோவிலுக்கு உள்ளே போயிட்டார்.
இத பாத்துகிட்டு இருந்தார் விறண்மிண்டர். சிவனடியார்களை கண்டு மரியாதை செய்யாம உள்ள போறதான்னு வருத்தமாயிடிச்சு. சுந்தரர் காதில விழற மாதிரி உரக்க "சிவனடியார்களை பாக்காம போகிற சுந்தரர் நமக்கு தேவையில்லை" ன்னு சொன்னார். எல்லாரும் அதிர்ச்சியாயிடாங்க. பின்னாலேயே "அப்படிப்பட்ட இவருக்கு சிவபிரான் அருள் பாலிப்பார்னா, அந்த சிவனும் நமக்கு தேவையில்லை" அப்படின்னார்.

உள்ளே போயிட்ட சுந்தரர் பதை பதைத்து போயிட்டார். சிவ பெருமான் கிட்ட உருகி வேண்டிக்கிட்டார். ”என்னை தடுத்து ஆட் கொண்ட பெருமானே உனக்கு தெரியாதா? புறத்தில் வணக்கம் செய்யலை. மனசால வணக்கம் பண்ணேன். அது மத்தவங்களுக்கு தெரியாதே. இப்படி ஒரு பழி சொல் எனக்கு வந்து விட்டதே" ன்னு வருந்தினார். சிவன் " கவலைபடாதேப்பா. என்னை இவ்வளோ பாட்டு பாடினியே, அடியார்களை பாடி அவங்க பெருமை எல்லாம் உலகம் அறிய பண்ணு" அப்படின்னார். அவங்க திருத்தொண்டைப்பத்தி எனக்கு ஒண்ணுமே தெரியாதேன்னார் சுந்தரர். "நான் அடி எடுத்து கொடுக்கிறேன். பாடு. மீதி எல்லாம் தானே வரும்" ன்னார் சிவ பெருமான்.

உள்ளே போயிட்ட சுந்தரர் இறைவனை வணங்கிட்டு நேரா கிட்ட வந்து மன்னிப்பு

கேட்டுக்கிட்டார். சிவனடியார் யாரையும் அவமதிக்கிற எண்ணம் தனக்கு இல்லைனார். அதை நிரூபிக்க "தில்லை வாழ் அந்தணர் அடியார்க்கும் அடியேன்" னு ஆரம்பிச்சு பாட்டு பாட ஆரம்பிச்சார். எல்லா அடியார்களின் பெருமைகளையும் கூறி "அவர்களுக்கு அடியேன்" அப்படின்னு பாடி முடிச்சார். (திருத்தொண்டர் தொகை என்கிற இததான் அடிப்படையா வச்சு பின்னால சேக்கிழார் பெரிய புராணம் பாடினார்.)

கூடி இருந்தவங்க எல்லாருமே பாடலை கேட்டு ரொம்ப சந்தோஷப்பட்டாங்க. இப்பதான் சுந்தரர் அடியார்கள் மேலே எத்தனை மதிப்பு வெச்சு இருக்கார்ன்னு தெரியுது ன்னு கொண்டாடினாங்க. அப்படி ஒரு அருமையான பாடல் தோன்ற காரணமான விறண்மிண்டரையும் எல்லாரும் பாராட்டினாங்க. விறண்மிண்டரும் ஆனந்தப்பட்டு போனார். இப்படி அடியார்களுக்கு தாஸ பாவத்தை காட்டின விறண்மிண்டரை சிவபெருமான் சிவ கணங்களுக்கு தலைவரா ஆக்கிட்டார்.

---

மதியம் வியாழன், மே 29, 2008

காதலன் காதலி பாவம்

பக்தர்கள் இறைவனை பாக்கிறதுல தன் காதலன் / காதலியா பாக்கிறதும் உண்டு.
மாணிக்கவாசகர் அப்படி நாயிகா பாவத்தில நிறைய பாடினாராம். ஆழ்வார்களும் அப்படி பாடியிருக்காங்க.
பாரதியார் கவிஞரானாலும் அவ்வப்போது ஞான / இறை அனுபவம் பெற்றவர்.
அவர் இறைத்தன்மையை சக்தியாகவும் கண்ணனாகவும் பார்த்தார். கண்ணனை தாயாகவும் குழந்தையாகவும் தகப்பனாகவும் ஆசானாகவும் சேவகனாகவும் பார்த்தவர்.
அப்படிப்பாத்து ஒவ்வொரு பாட்டு எழுதினவர் "கண்ணன் என் காதலன்" னு ஆரம்பிச்சு பாட்டா எழுதி தள்ளிட்டார் போலிருக்கு!
முதல்லே என்னன்னே புரியாம வெளியிலே வெச்ச விளக்கு அலையறதை போல அல்லல் படுறார்.

தூண்டிற் புழுவினைப்போல் - வெளியே
சுடர் விளக்கினைப்போல்
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சம் துடித்ததடீ
கூண்டுக்கிளியினை போல் - தனிமை
கொண்டு மிகவும் நொந்தேன்
வேண்டும் பொருளை எல்லாம்-
மனது வெறுத்து விட்டதடீ.........

திடீர்ன்னு ஒரு நாள் கொஞ்சம் புரிகிறது.

கனவு கண்டதிலே - ஒரு நாள்
கண்ணுக்கு தோன்றாமல்
இனம் விளங்கவில்லை - எவனோ
என்னகம் தொட்டுவிட்டான்....

யார்ரான்னு யோசிக்கிறார்.

எண்ணி எண்ணி பார்த்தேன்: - அவன்தான்
யாரெனச் சிந்தை செய்தேன்
கண்ணன் திருவுருவம் - அங்ஙனே
கண்ணின் முன் நின்றதடீ!

அப்புறம் கண்ணனாலதான் எல்லாம்ன்னு தெரிகிறது. உறக்கத்திலும் விழிப்பிலும் அவனே இருக்கிறான்.

.....நானும் பல தினங்கள் பொறுத்திருந்தேன் - இது
நாளுக்கு நாள் அதிகமாகிவிட்டதே
கூன னொருவன் வந்திந் நாணி பின்னலைக்
கொண்டை மலர் சிதற நின்றிழுத்தும்....

பயல் படுத்துகிறான். அவன் கதைகளெல்லாம் கேட்க கேட்க தூக்கம் இல்லாம போகுது! கண்ணன் எங்கே எங்கேன்னு தேடுகிறார். காட்டிலேயெல்லாம்!

.

.....திக்குத்தெரியாத காட்டில்- உனைத்
தேடித் தேடி இளைத்தேனே!...

காட்டிலே வேடன் ஒத்தன் பாத்து ஆசை வைக்கிறான். பாரதி மறுக்கிறார்.

"அண்ணா உனதடியில் வீழ்வேன் - எனை
அஞ்சக்கொடுமை சொல்ல வேண்டா - பிறன்
கண்ணலஞ் செய்துவிட்ட பெண்ணே - எந்தன்
கண்ணற் பார்த்திடவுந் தகுமோ?"

வேடன் வற்புறுத்துகிறான். "கண்ணா!" என்று அலறி மயங்கி விழுகிறார். நினைவு வரும் போது யாரையும் காணோம்!

அப்புறம்

கண்ணன் மனநிலையைத் - தங்கமே தங்கம்
கண்டு வர வேணுமடி தங்கமே தங்கம்

ன்னு தூது விடுகிறார்.

"நேர முழுவதிலுமப் பாவி தன்னையே - உள்ளம்
நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம்
தீர ஒரு சொலின்று கேட்டு வந்திட்டால் - பின்பு
தெய்வம் இருக்குதடி தங்கமே தங்கம்"

என்று வெறுத்துப்போகிறார்.

இப்படி உருகற ஆசாமிக்கு காதலன் உருவம் கூட மறக்குமா என்ன? அப்படியும் ஆயிடுது! பிறிவாற்றாமையில் புலம்புகிறார்:

"கண்கள் புரிந்துவிட்ட பாவம் -உயிர்க்
கண்ணனுரு மறக்கலாச்சு!
பெண்களினிடத்திலிது போலே - ஒரு
பேதையை முன்புகண்ட துண்டோ?"

இப்படி ஒரு பக்தன் காதலனாக பகவானை நினைத்து பக்தி செலுத்தறதை சுப்ரமணிய பாரதியார் நல்லாவே காட்சிக்கு கொண்டு வரார். முழு பாடல்களையும் படிச்சுப்பாருங்க!

---

மதியம் வெள்ளி, மே 30, 2008

சாந்த பாவம்

மகாபாரத யுத்தம் நடந்தப்ப முதல்ல அர்சுனன் சண்டை போட தயங்கினதும் அப்புறமா கண்ணன் பகவத் கீதை உபதேசம் செய்ததும் அதற்கு அப்புறமா அர்சுனன் தன்னோட கடமையை உணர்ந்து சண்டை ஆரம்பிச்சதும் நமக்கு தெரியும்.

இப்படி சண்டை நடந்தபோது இரண்டாம் நாள் சண்டையில பாண்டவர்கள் பக்கம் கொஞ்சம் வெற்றியும் அதனால உற்சாகமும் உண்டாச்சு. துரியோதனனுக்கு செம கடுப்பு.
அடுத்த நாள் சண்டைலேயும் அதே மாதிரி தொடர அவன் பீஷ்மரை போய் பாத்து "நீங்க, கிருபர், துரோணர் ன்னு மூணு பெரிய வீரர்கள் என் பக்கம் சண்டை போடறீங்க. ஆனா நம்ம படைகள் தோத்து ஓடுது. இது எப்படி சாத்தியம்? பாண்டவர்கள் மேல இருக்கிற அன்பாலதான் சும்மா விடறீங்க. அவங்கள எல்லாம் எதிர்க்க உங்களுக்கு விருப்பம் இல்லைனா முன்னாலேயே சொல்லி இருக்கலாமே? நான் வேற வழியை பாத்து இருப்பேன்", அப்படின்னு கண்டபடி பேச பீஷ்மர் கடுப்பாயிட்டார். "நான் முடிஞ்ச வரை உக்கிரமாதான் சண்டை போடறேன். நான் உனக்கு முன்னேயே சொன்னேனே. கிருஷ்ணன் பக்கம்தான் எப்படியும் வெற்றி கிடைகும்ன்னு. அவன் உதவி கிடைக்கிறவரை பாண்டவர்கள இந்திரனால கூட ஜெயிக்க முடியாது. இருந்தாலும் நீ சொல்லறதனால இந்த கிழவன் இன்னும் உக்கிரமா சண்டை போடுவான்" அப்படின்னார். அப்புறமா பீஷ்மர் சண்டை போடற விதமே மாறி போச்சு.

அவர் மாயா ஜாலம் செய்யறாரோன்னு கூட சந்தேகப்படற மாதிரி ஆயிடுத்து. எங்கே பாத்தாலும் அவரே சண்டை போடற மாதிரி தோணிச்சு. ஒரு நெருப்பு வட்டம் மாதிரி எதிர்த்த எல்லாரையும் அழிச்சார்.

கிருஷ்ணன் அர்சுனன பாத்து " டேய், இப்படியே விட்டா இன்னிக்கி யுத்தம் முடிஞ்சுடும். பீஷ்மர் துரோணர் எல்லாரையும் கொல்லுவேன் ன்னு சத்தியம் பண்ணி இருக்க இல்ல? அத ஞாபகம் வச்சிகிட்டு சண்டை போட்டு இந்த பீஷ்மரை அடக்கு" ன்னான்.
சரின்னு அர்சுனன் சொல்ல கண்ணன் தேரை நேரா பீஷ்மர் பக்கம் செலுத்தினான். அர்சுனனும் சண்டை போட ஆரம்பிச்சான். நல்லாதான் சண்டை போட்டான். ஆனாலும் அரைகுறை மனசோடதான் சண்டை போட்டான். பீஷ்மரோ அர்சுனன் சாமர்த்தியத்த பாராட்டிகிட்டே கொஞ்சமும் உக்கிரம் குறையாம சண்டை போட்டார். கண்ணன் பாத்தான். இதெல்லாம் வேலைக்கு ஆவாது. இந்த அர்சுனன் பயல கொஞ்சம் உசுப்பு ஏத்தி விடணும்ன்னு முடிவு பண்ணான்.

அப்ப பல அரசர்கள் யுத்த களத்த விட்டு ஓட ஆரம்பிச்சு இருந்தாங்க. கண்ணன் "போகட்டும், போகட்டும். இன்னும் யார் ஓடாம இருக்காங்களோ அவங்களும் போகட்டும். நானே நேரா இறங்கி பீஷ்மரையும் துரோணரையும் கொல்லுவேன். பாண்டவர்களுக்கு ராஜ்யத்த மீட்டு கொடுப்பேன்" அப்படின்னு சொல்லி தேரை விட்டு இறங்கினார். சக்கிராயுதத்தை மனசால நினச்சார். அதுவும் உடனே வந்து சேர்ந்தது. அத எடுத்துகிட்டு பூமி அதிர பீஷ்மரை நோக்கி நடந்தார்.

என்னடா பக்திய பத்தி பேச வந்துட்டு சண்டை பத்தி பேசறானேன்னு நினைக்கிறீங்க இல்லை? முக்கியமான விஷயம் இப்பதான் வருது.

பீஷ்மர் என்ன பண்ணார்? ரொம்ப சந்தோஷப்பட்டு போனார். "கிருஷ்ணரே வாரும். இப்ப உங்களால கொல்லப்பட்டாலும் எனக்கு இந்த பிறவியிலேயும் பின்னாலேயும் நன்மைதான் கிடைக்கும். நீங்களே என்ன எதிர்க்கிறதால நான் கௌரவ படுத்தப்படறேன்" அப்படின்னு

சாந்தமா சொன்னார்.

போர் பூமில இப்படி ஒரு சாந்தம்!

அப்புறமென்ன? அர்சுனன் ஓடி வந்து " கிருஷ்ணா, ஆயுதம் எடுக்க மாட்டேன்னு நீ செய்த சபதத்தை நீயே மீற வேண்டாம். நான் கொஞ்சமும் தயக்கம் இல்லாம சண்டை போடறேன்" அப்படின்னு சமாதானப்படுத்த போர் தொடர்ந்தது.

பீஷ்மர் போன்ற ஞானிகள் பகவானோட எப்பவுமே சாந்த பாவத்தில உறவு வைத்தவங்க.

---

மதியம் செவ்வாய், ஜூன் 3, 2008

பக்தி கதை

ஒரு அழகான பக்தி கதையோட இந்த பக்தி பகுதியை இப்போதைக்கு முடிக்கிறோம்.

கண்ணன் ஆறு வயசு பையன். அவன் அப்பா உயிரோட இல்லை. அம்மா ஏதோ அப்பப்ப கிடைச்ச வேலை செஞ்சு குடும்பத்தை சமாளிக்கிறாங்க. பையனை படிக்க அனுப்பணுமே. பக்கத்து பள்ளினா அடுத்த ஊர்தான் போகனும். அதுக்கு காட்டுப்பாதைலதான் போயாகனும். வேற வழி இல்லை. சரி, கஷ்டமோ நஷ்டமோ சேத்துதானே ஆகனும். பையனை பள்ளில சேத்தாச்சு. ஆனா அவனை தினமும் கொண்டு விட்டு அழைச்சு வர முடியுமா? அதுக்கே நேரம் போச்சுனா வேலை எங்க செய்யறது? சாப்பாட்டுக்கு என்ன செய்யறது? நீ நல்ல பையன்தானே? நீயே தனியா போயிட்டு வான்னு அம்மா சொன்னாள். "நீ சொன்னா சரிம்மா" ன்னு குழந்தையும் கிளம்பி போனான். சின்னப் பையன்தானே. காட்டு வழி போனதும் பயமா போச்சு. அழுதான். என்ன பிரயோசனம்? உதவ யாரும் அங்க இல்லை. அழுதுகிட்டே ஓடி போய் சேந்துட்டான். இவன் அழதுகிட்டே வந்ததை பாத்த குரு என்னன்னு விசாரிச்சு சமாதானப் படுத்தினார். அன்னைய பாடம் நடந்தது. சாயந்திரம் "குழந்தை, நாளை துணை இல்லாம வராதே" ன்னு சொல்லி ஒத்தர் துணையோட வீட்டுக்கு அனுப்பினார்.

அடுத்த நாள் குழந்தையை அம்மா பள்ளிக்கு போகச்சொல்ல அவனோ குரு சொன்னதை ஞாபகப்படுத்தினான். "அம்மா அந்த காட்டு வழில போக எனக்கு பயமா இருந்தாலும் நீ சொல்கிறதால போயிடுவேன். ஆனா குரு உத்தரவு போட்டுட்டாரே மீறலாமா?'' ன்னு கேட்டான். அம்மாவுக்கு என்ன செய்யறதுன்னு புரியலை. இந்த குழந்தை பாவம் கஷ்டப்பட கூட தயாரா இருக்கான். இவன் படிக்காம இருக்கலாமா? ஆனா யாரை துணையா கூட அனுப்பறது? யாருமே நமக்கு இல்லையே. நமக்குன்னு இருக்கிறவன் பகவான் ஒத்தன்தான். அவனைதான் அனுப்பணும். யோசனை பண்ணிட்டு குழந்தையை பாத்து சொன்னாள். "நான் அம்மா சொல்றேன். நீ பள்ளிக்கூடம் போ. காட்டு வழில பயமா இருந்தா உன் அண்ணாவை கூப்பிடு. அவன் துணை வருவான்.'' பையனுக்கு ஒரே சந்தோஷம். "அட! எனக்கு ஒரு அண்ணா இருக்கான்னு தெரியவே தெரியாதே. அவன் பேரு என்ன?''
"அவன் பேர் கோபாலன்.''

சந்தோஷமா கிளம்பினான் பையன். காட்டுப்பாதைல கொஞ்ச தூரம் தைரியமா போனாலும் அப்புறம் பயம் வந்தாச்சு. "அண்ணா! அண்ணா!" ன்னு கூவினான். என்னடான்னு கேட்க யாரும் யாரும் அங்க இல்லை. இவனுக்கோ ரொம்ப பயமா போச்சு "அம்மா சொன்னாளே, நீ இருக்கே நிச்சயமா வருவாய்ன்னு. வரமாட்டியா? என் மேல என்ன கோபம்?" ன்னு புலம்ப ஆரம்பிச்சான். கொஞ்ச நேரத்துலேயே புல்லாங்குழல் சத்தம் கேட்டது. ஒரு இளைஞன் கன்னுக்குட்டி ஒன்னு பின்னால வர வந்து சேந்தான். "மன்னிச்சுக்கப்பா! நான் காட்டுல அந்த பக்கம் இருந்துட்டேன். என்ன வேணும்?" ன்னு கேட்டான். "நான் தினமும் பள்ளிக்கூடம் இந்த வழியா போகணும். நீதான் துணைக்கு வரணும்" னு பையன் சொன்னான். "ஓ! அதுக்கென்ன நிச்சயம் வரேன்" னு இளைஞன் ஒத்துக்கிட்டான்.

---

அன்னிலிருந்து குழந்தைக்கு ஒரே குஷிதான். தினசரி இரண்டு பேரும் ஆடறதும் பாடறதும் கன்னுக்குட்டயோட கூத்தடிக்கிறதும்.... கோபாலன் குழந்தைக்கு நிறைய விஷயங்கள் கத்துக்கொடுத்தான்.

இப்படியே நாள் ஓட குரு பூர்ணிமா வந்தது. அன்றைக்கு மாணவர்கள் தங்களால முடிந்த தக்ஷிணையை குருவிடம் சமர்ப்பணம் செய்வாங்க.. மத்தவங்க எல்லாம் எங்க அப்பா அத கொடுப்பார் இத கொடுப்பார்னு கதை அளக்க இவனுக்கோ ஒரே வருத்தம். அம்மாகிட்ட கேட்டதுக்கு "ஒண்ணுமே இல்லையேப்பா கொடுக்க" ன்னு சொல்லிட்டாங்க. கவலையோட பள்ளிக்கூடம் போற குழந்தையை கோபாலன் "ஏன்டா வருத்தமா இருக்க?" ன்னு கேட்டான். விஷயம் தெரிஞ்சதும் "கொஞ்சம் இரு" ன்னு சொல்லி கொஞ்ச நேரத்துலேயே திரும்பி வந்தான். ஒரு சின்ன மண் சட்டில ரொம்ப கொஞ்சமா வெண்ணை இருந்தது. இத குருகிட்ட கொடு. அவர் வாங்கிப்பார்னு சொல்லி அனுப்பினான். குழந்தையும் சந்தோஷமா எடுத்துகிட்டு போனான்.

பள்ளிக்கூடத்தில பசங்க வித விதமா பொருட்கள் கொண்டு வந்து குவிச்சாங்க. இவன் வெண்ணை சட்டியை கொடுத்தப்ப சிரிச்சாங்க. குரு அவர்களை அதட்டி சும்மாயிருக்க சொல்லி "குழந்தே! உன் நிலமை எனக்கு தெரியுமே! உனக்கு ஏது இது?"ன்னு கேட்டார் பையன் "என் அண்ணா கொடுக்கச்சொல்லி கொடுத்தான்" னு சொன்னான். "யாரடா இவனுக்கு அண்ணா? யாரும் கிடையாதே!'' ன்னு நினச்சுக்கொண்டே குரு சட்டியை வாங்கி தன் மனைவிகிட்ட கொடுத்தார். அவர் மனைவியும் அதை வாங்கி அங்க வந்த தன் குழந்தைக்கு வெண்ணையை கொடுத்தாள். மத்த குழந்தைகள் கைநீட்ட அவளும் கொடுத்துக்கொண்டே இருந்தாள். எல்லா குழந்தைகளுக்கும் தந்த பிறகு எப்படி இன்னும் வெண்ணை இருக்குன்னு சிந்தனை வந்தது. இருந்தது இரண்டு குழந்தைகளுக்கு கூட காணாதே! அவள் ஆச்சரியப்பட்டுகொண்டு இருக்கும்போது பசங்களோ ரொம்ப நல்லா இருக்குன்னு கை நீட்டிக்கிட்டே இருக்காங்க. குரு மனைவிக்கு கொடுத்து மாளலை. வெண்ணையோ குறையலை. இத கேள்விபட்டு வந்த ஜனங்களுக்கும் கொடுத்து இன்னும் யாருமே இல்லைங்கிறப்பதான் அது காலி ஆச்சு. எல்லாருக்கும் இப்ப இது எப்படி நடந்ததுன்னு புரியலை.

பையனை அழச்சுகிட்டு அவன் அம்மாகிட்ட போனாங்க. அவளோ தனக்கு ஒண்ணுமே தெரியாதுங்கிறாங்க. யாரடா அந்த அண்ணன்னு பையனை கேட்டா அம்மா நீதானே காட்டுல மாடு மேச்சிகிட்டு ஒரு அண்ணன் இருக்கிறதா சொன்ன என்கிறான். எல்லாரும் காட்டு வழிக்கு போய் "எங்கே உன் அண்ணனை காட்டு?" ன்னாங்க. பையன் கூப்பிட கூப்பிட யாருமே வரலை. பையன் அழ ஆரம்பிச்சுட்டான். "நான் பொய் சொன்னதா எல்லாரும் சொல்லறாங்களே அதை சரி பண்ண நீ வந்துதான் ஆகனும்" ன்னு அழுதான். அப்ப புல்லாங்குழல் சத்தம் கேட்க குழந்தையும் குதிக்கிறான் "வா! வா! நீ நிச்சயம் வருவாய்ன்னு தெரியும். இதோ இவங்ககிட்டே நீ யாருன்னு சொல்லு" ங்கிறான். ஜனங்களுக்கோ புல்லாங்குழல் ஓசை கேட்டது தவிர ஒன்னும் தெரியலை. "இவன்தான் என் அண்ணன்" ன்னு பையன் கூத்தாட எல்லாருக்கும் அது யார்ன்னு சீக்கிரமே புரிஞ்சு போச்சு.